ஜெகத்தாரணி

# செந்தமிழ் வாசகக் கையேடு

## ஏழாம் வகுப்பு

(முப்பருவப் பாடநூல் தொகுப்பு)

ஜெகத்தாரணி பப்ளிஷிங் ஹவுஸ்
எஜுகேஷனல் பப்ளிஷர்ஸ்

சென்னை மதுரை கோவை

## எங்கள் தமிழ் ( கவிதைப்பேழை )

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :**

1. வழி 2. குரல் + ஆகும் 3. வானொலி

**ஆ) நயம் அறிக.**

| | | |
|---|---|---|
| 1. அன்பும் | இன்புறவே | ( மோனைச்சொற்கள்) |
| அச்சம் | இசைந்திடும் | |
| 2. கொல்லா | அன்பும் | ( எதுகைச் சொற்கள் ) |
| எல்லா | இன்பம் | |
| 3. புகழாது | ஊக்கிவிடும் | ( இயைபுச் சொற்கள்) |
| இகழாது | போக்கிவிடும் | |

**இ) குறுவினா**

**1. தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?**

- தமிழ்மொழி எல்லா உயிரினங்களும் ஒன்று என்னும் அறிவுப்பாதையை விளக்குகிறது.
- அதுவே தமிழ் மக்களின் குரலாகவும் விளங்குகிறது.

**2. தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.**

- பொருள் பெறுவதற்காக எவரையும் புகழமாட்டார்கள்.
- பொருள் கொடுக்காதவர்களை இகழவும் மாட்டார்கள்.
- இதுவே தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளாகும்.

**ஈ) சிறுவினா**

**1. எங்கள் தமிழ் பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

- தமிழ்மொழி அருள்நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது.
- அதுவே தமிழ் மக்களின் குரலாகவும் விளங்குகிறது.
- தமிழ் மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழவும் மாட்டார்கள், தமக்கு பொருள் கொடுக்காதவர்களை இகழவும் மாட்டார்கள்.
- கொல்லாமையை குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டவர்கள்.
- எல்லா உயிர்களும் அன்பு வழியில் இன்புற்று வாழ விரும்புவர்.
- அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும்.
- எங்கள் தமிழ்மொழி அச்சத்தைப் போக்கி இன்பத்தைத் தரும் தேன் போன்ற மொழியாகும்.

**உ) சிந்தனை வினா**

**1. கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?**

- தேன் பல ஆண்டுகள் கெடாமல் இருப்பதை போலத் தமிழும் என்றும் கெடாமல் பாதுகாப்புடன் திகழ்கிறது.
- தேன் சாப்பிட உடல்வளம் பெருகும். தமிழ் கற்க உள்ளம் வளம் பெருகும். அதனால் கவிஞர் தமிழைத் தேனுடன் ஒப்பிடுகிறார்.

**2. ‘இன்பம் பொழிகிற வானொலியாம் எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்’ - விளக்குக.**

- வானில் இருந்து ‘சோ’ என்னும் ஓசையுடன் பொழியும் மழை இன்பம் தரும்.
- அது போல இனிய ஓசையுடன் மக்கள் நாவில் இருந்து ஒலிக்கும் எங்கள் தமிழ்மொழி தேன் போன்ற மொழியாகும்.

## ஒன்றல்ல இரண்டல்ல (கவிதைப்பேழை)

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :**

1. பரணி 2. முகில் 3. இரண்டு + அல்ல 4. தந்து + உதவும் 5. ஒப்புமையில்லாத

**ஆ) குறுவினா.**

**1. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?**

- வீசும் தென்றலின் தேனின் மணம் கலந்து கமழுவதும், சுவை மிகுந்த செந்நிறத்தில் கனிந்த பழங்களும், பொன் போன்ற தானியக்கதிர்களும் தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுகின்றார்.

**2. 'ஒன்றல்ல இரண்டல்ல' - இப்பாடலில் இடம் பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.**

- முல்லைக்கு தேர் தந்த வள்ளல் வேள்பாரி.
- புலவரின் சொல்லுக்குத் தலையைத்தர துணிந்த குமணவள்ளல்

**இ) சிறுவினா**

**1. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?**

- ஆயிரம் யானைகளைப் போர்களத்தில் கொன்ற பெருவீரனது வெற்றியினைச் சிறப்பித்துப் பாடும் நூல் பரணி ஆகும்.
- வளமான கருத்துகளையும், நயங்களையும் கொண்ட இசைப்பாடலான பரிபாடல், கலம்பகம், எட்டுத்தொகை ஆகிய நூல்களும் உண்டு.
- வானளவு புகழ் பெற்று விளங்கும் திருக்குறள்.
- அகமாய், புறமாய் சிறந்த கருத்துக்களைக் கூறும் சங்க இலக்கிய நூல்கள்.
- இத்தகைய இலக்கிய வகைகள் தமிழுக்கு வளம் சேர்ப்பவைகளாக உள்ளன.

**ஈ) சிந்தனை வினா.**

**1. தமிழில் அற இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றக் காரணம் என்ன?**

- மனிதன் வாழ்க்கையில் அடைய வேண்டியவை அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற நான்கு ஆகும்.
- தமிழர்கள் அடிப்படையில் அறச்சிந்தனை மிகுந்தவர்கள். அதுவே தமிழில் அறஇலக்கியங்கள் மிகுதியாக தோன்றக்காரணமாக அமைந்தது.
- நம் தமிழில் சிறந்த அற இலக்கியமாகத் திகழ்வது திருக்குறளாகும்.
- மனிதர்கள் அறவழியில் இருந்து விலகும் பொழுது நல்வழிப்படுத்த அறஇலக்கியங்கள் உதவுவதால் அற இலக்கியம் தோன்றியது.

## கற்பவை கற்றபின்

**1. தமிழுக்குக் கொடை கொடுத்த வள்ளல்கள் பற்றிய செய்திகளைத் திரட்டுக.**

பேகன் - மயிலுக்குப் போர்வை தந்தவன்
பாரி - முல்லைக்குத் தேர் கொடுத்தவன்
காரி - இரவலர்க்கு குதிரை, தன்நாடு, அன்பு கலந்த இன்சொற்களை அளித்தவன்.
ஆய் - நாகம் கொடுத்த நீல நிற கலிங்கத்தை ஆலின் கீழ் அமர்ந்த இறைவனுக்கு அளித்தவன்.
அதிகன் - ஔவைக்கு நெல்லிக்கனி அளித்தவன்.
நள்ளி - வேண்டிய பொருள்களைத் தந்தவன். (இனிய வாழ்விற்கு தேவையான அனைத்து பொருளையும் தந்தவன்)
ஓரி - தன்வளநாடுகள் பலவற்றை அளித்தவன்.

**2. தமிழில் உள்ள பல்வேறு இலக்கிய வடிவங்களின் பெயர்களைப் பட்டியலிடுக.**

❖ காப்பியம் ❖ சிற்றிலக்கியம் ❖ மரபுக்கவிதை ❖ புதுக்கவிதை ❖ சிறுகதை ❖ தொடர்கதை
❖ கட்டுரை ❖ இதிகாசம் ❖ பழமொழி ❖ விடுகதை ❖ உரைநடை ❖ கட்டுரை
❖ கலந்துரையாடல் ❖ உவமை ❖ நாவல்

## பேச்சுமொழியும் எழுத்து மொழியும் (உரைநடை உலகம்)

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :** 1. கேட்டல் 2. எழுத்து 3.தெலுங்கு 4. உலகு

**ஆ)சரியா, தவறா என எழுதுக.** 1. சரி 2. சரி 3. தவறு 4. தவறு 5. சரி

**இ) ஊடகங்களை வகைப்படுத்துக.**

| எழுத்துமொழி | பேச்சுமொழி |
|---|---|
| நூல்கள், | வானொலி, |
| மின்னஞ்சல், | தொலைக்காட்சி, |
| செய்தித்தாள் | திரைப்படம். |

**ஈ) குறுவினா**

**1. மொழியின் இரு வடிவங்கள் யாவை?**

- பேச்சுமொழி
- எழுத்துமொழி

**2. பேச்சுமொழி என்றால் என்ன?**

வாயினால் பேசப்பட்டு மற்றவர்களால் கேட்டு உணரப்படுவது பேச்சுமொழி ஆகும்.

**3. வட்டாரமொழி எனப்படுவது யாது?**

மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்ப பேச்சுமொழி இடத்திற்கு இடம் மாறுபடும். இவ்வாறு மாறுபடும் ஒரு மொழியின் வெவ்வேறு வடிவங்களே வட்டாரமொழி எனப்படும்.

**உ) சிறுவினா.**

**1. பேச்சுமொழிக்கும், எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை விளக்குக.**

| பேச்சுமொழி | எழுத்துமொழி |
|---|---|
| 1. உலக வழக்கு. | 1. இலக்கிய வழக்கு |
| 2. சொற்கள் பெரும்பாலும் குறுகி ஒலிக்கும். | 2. சொற்கள் முழுமையாய் எழுதப்படும். |
| 3. உணர்ச்சி கூறுகள் அதிகம். | 3. உணர்ச்சி கூறுகள் குறைவு. |
| 4. உடல்மொழி, குரல் ஏற்றத்தாழ்வும் உண்டு. | 4. உடல்மொழி, குரல் ஏற்றத்தாழ்வு போன்றவற்றிற்கு இடமில்லை. |

**2. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?**

- மக்கள் வாழும் இடத்தின் நிலஅமைப்பு, இயற்கைத்தடைகள் போன்றவற்றின் காரணமாய் மக்கள் பேசும்மொழியில் சிறிது சிறிதாக மாற்றங்கள் ஏற்படும்.
- மக்களுக்கு இடையேயான தொடர்பு குறையும் பொழுது மாற்றங்கள் மிகுதியாகி புதிய மொழியாகப் பிரியும். அவ்வாறு உருவாகும் புதியமொழி கிளைமொழி ஆகும்.
- தமிழில் இருந்து பிரிந்து சென்ற சில கிளைமொழிகள்: கன்னடம், தெலுங்கு, மலையாளம்.

**ஊ) சிந்தனை வினா**

**1. இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் வாழ்வதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?**

- இலக்கியங்கள் நம் வாழ்விற்கு வழிகாட்டக்கூடிய ஒளி விளக்குகளாகும்.
- இலக்கியங்கள் வழாங்குகின்ற கருத்துகள் எக்காலமும் நிலைத்து நிற்கின்ற கருவூலமாகத் திகழ்கின்றன.
- எனவே தான் சங்க இலக்கியக்காலத்திலிருந்து தற்காலம் வரை அறஇலக்கியங்கள் பல்வேறு வகைகளிலும் தோன்றி காலம் கடந்தும் அழியாமல் வாழ்கின்றன.

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் வீட்டில் பயன்படுத்தும் பேச்சுவழக்குத் தொடர்களுக்கு இணையான எழுத்து வழக்குத்தொடர்களை எழுதி வருக.**

பேச்சுமொழி : நல்லா படிச்சான்.
எழுத்துமொழி : நன்றாகப் படித்தான்.
பேச்சுமொழி : வீட்டுப்பாடம் எழுதிட்டியா.
எழுத்துமொழி : வீட்டுப்பாடம் எழுதி விட்டாயா?
பேச்சுமொழி : அண்ணா, வேலக்கி போகலயா?
எழுத்துமொழி : அண்ணா, வேலைக்குப் போகவில்லையா?

2. பேசும்போது சில நேரங்களில் சொற்களின் இறுதியில் உகரம் சேர்ந்து ஒலிப்பது உண்டு. 'ஆ' என்னும் எழுத்து இகரமாக மாறுவதும் உண்டு. அவ்வாறு ஒலிக்கும் சொற்களை எழுதி அவற்றுக்கு இணையான எழுத்து வழக்குச் சொற்களையும் எழுதுக.

| சொல்வழக்கு | | எழுத்து வழக்கு |
|---|---|---|
| நெல்லு | - | நெல் |
| நூலு | - | நூல் |
| பாலு | - | பால் |
| எழுந்தியா? | - | எழுந்தாயா? |
| சாப்டியா? | - | சாப்பிட்டாயா? |
| வந்தியா? | - | வந்தாயா? |

## சொலவடைகள் ( பொம்மலாட்டம் ) ( விரிவானம் )

### மதிப்பீடு :

அ) சிறுவினா :

1. பாடப்பகுதியில் இடம் பெற்ற நாடகத்தைக் கட்டுரையாக எழுதி, அதன் வழி நீ அறிந்த நீதியைக் கூறுக.

பொம்மலாட்டம் என்பது நாட்டுப்புற கலைகளுள் ஒன்று. பின்னணியில் கதை மாந்தர்களை பேச விட்டு கதை சொல்லத் தொடங்குவர். நம் பாடப்பகுதியில் 'கிராமத்து மணம்' என்னும் கதையைப் பொம்மலாட்டமாய்க் காணப் போறோம். கிராமத்து செல்லாயி பாட்டி தான் நம்ம கதைநாயகி. இவளும் அந்த கிராமத்து மக்களும் ஆழமானக் கருத்தைக் கொண்ட சொலவடைகளை எளிதாகப் பேசுவர்.

செவ்வந்தி தன் மகனை கூப்பிட்டு கூப்பிட்டு எத்தனை முறை கூப்பிடுவது என்று சலித்துக் கொண்டாள். அதைப் பார்த்த செல்லாயி "முன்னத்தேர் கோணினால் பின்னத்தேர் கோணாம என்ன செய்யும்?" நீ நான் கூப்பிட்டப்போ வந்தியோ! என்றாள். மேலும் செவ்வந்தியிடம் அவன் வந்தா அவன திட்டாத "கடுங்காத்து மழை கூட்டும்! கடும் கோபம் பகை கூட்டும்" என்றாள். அதற்கு செவ்வந்தி "கடல்மீனுக்கு நுழையான் இட்டதே பெயர்" என்றாள்.

பேரனைத் தேடிப் போன செல்லாயி, அவன் வராததால் "குடப்பால் கறந்தாலும் கூரையப் பிடுங்கிற மாடு வேண்டாம்" என்றவள் இனிமே எங்க அவன் வரப்போறான் "குப்பை மேனி பூப்பூத்துக் கொண்டைக்கு ஆவதில்லை" நானே போறேன் என்றாள். அப்பொழுது அந்தப்பக்கம் வந்த கருப்பாயிய பாத்த செல்லாயி என்ன இந்த பக்கம் என்றாள்? அதற்கு கருப்பாயி, "கெட்டிக்காரன் புஞ்சையில் எட்டுப்பாதை" என்றாள். அதற்கு செல்லாயி "தட்டான் தாழப்பறந்தால் தப்பாமல் மழைன்னு தெரியாதோ" என்றாள். அப்பொழுது வேலைக்குப் போகாமல் வீட்டிலிருக்கும் தன் கணவனைப் பற்றி கருப்பாயி புலம்ப, "வடக்கே பிறை சாஞ்சா வரப்பெல்லாம் நெல்; தெற்கே பிறை சாஞ்சா தெருவெல்லாம் விதைப்பெட்டி" புரிஞ்சுக்கிட்டானா வேலைக்குப் போய்ருவான் என்றாள் செல்லாயி பாட்டி.

செல்லாயிய பார்த்த கருப்பாயி கணவன் தொங்கான் செல்லாயி பாட்டியிடம், 'வெடிஞ்சா கண்ணாலம் பிடிங்கடா வெத்தலய" ங்கற மாதிரி சீக்கிரம் வேலை கிடைச்சுடும் என்றான். புதுசா வீடுகட்டும் பாலன், ''அசைபோட்டுத் திங்குது மாடு. அசையாமல் திங்குதுவீடு''ன்னு சலித்துக் கொண்டான். அவனிடம், "காலுக்கேத்த செருப்பும் கூலிக்கேத்த உழைப்பும் இருந்தா எல்லாம் சாத்தியமடா" என்றாள் செல்லாயி பாட்டி.

ஏம்பாட்டி பேசிக்கிட்டே இருக்க என்ற செல்வத்திடம் "ஆடியகாலும், பாடிய வாயும் சும்மா இருக்குமா" என்றாள் செல்லாயி பாட்டி. செல்வத்தை பள்ளியில் சேர்க்க "ஈட்டி எட்டு முழம் பாயும்; பணம் பாதாளம் வரை பாயுமடி" ஆடுவித்த காசை எடுத்துப் பள்ளிக்கூடம் சேரு என்றாள். பக்கத்துவீட்டுப்பெண் என் மகனுக்கு இப்படி ஒரு பாட்டி இல்லை "வாய்ச்சதும் தண்டம், விதிச்சதும் தண்டம்" என்ன செய்ய எனப் புலம்பினாள். "தான் தின்னி பிள்ளவளக்காது; தவிடுதின்னி கோழி வளக்காது" எல்லாம் நல்லதே நடக்கும் என்றாள் செல்லாயி பாட்டி.

## கற்பவை கற்றபின்

1. உங்கள் பகுதியில் வழங்கி வரும் சொலவடைகளைத் தொகுத்து வருக..

1. அப்பன் குதிருக்குள்ள இல்ல
2. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை
3. வெளைச்சலுக்கும் வெள்ளாட்டுக்கும் ஜென்மப்பகை
4. அடைமழை விட்டாலும் செடி மழை விடாது
5. தட்டிப் போட்ட ரொட்டிக்குப் புரட்டிப் போட ஆளு இல்லே.

2. உனக்குப் பிடித்த சொலவடைகளைக் கொண்டு சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. ஆயிரம் கலம் நெல்லுக்கு ஒரு அந்துப்பூச்சி போதும் உழைக்கிறவன் மத்தியிலே உதவாக்கரை ஒருத்தன் இருந்தால் அந்தக்கூட்டமே கெட்டுவிடும்.
2. புண்ணுக்கு மருந்து போட முடியும் புடிவாதத்துக்கு மருந்து போட முடியுமா? வீண் விதண்டாவாதம் செய்கிறவனிடம் பேசி ஜெயிக்க முடியாது.
3. அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே சொர்க்கம்னு சொல்லுற மாதிரி நிழலில் படுத்து தூங்கினதால ஆமையிடம் தோற்று போச்சாம் முயலு.

## குற்றியலுகரம் – குற்றியலிகரம் (கற்கண்டு)

### மதிப்பீடு :

அ) கீழ்க்காணும் சொற்களைக் குற்றியலுகர வகையின் அடிப்படையில் வகைப்படுத்துக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நெடில்தொடர் | : ஆறு, காசு | வன்தொடர் | : உழக்கு, எட்டு | ஆய்தத்தொடர் : | எஃகு |
| மென்தொடர் | : பந்து, கரும்பு | உயிர்த்தொடர் | : விறகு | இடைத்தொடர் : | கொய்து |

ஆ) பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக.

1. ஆறு 2. பஞ்சு 3. அது 4. அரசு 5. எஃகு

இ) குறுவினா :

**1. குற்றியலுகரம் என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.**

குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம்

வல்லின மெய் எழுத்துகளான (க், ச், ட், த், ப், ற்) உடன் சேர்ந்து வரும் உகரமான கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறும் தனக்குரிய ஒரு மாத்திரை அளவில் இருந்து அரைமாத்திரையாக குறைந்து ஒலிக்கும். இதற்கு குற்றியலுகரம் எனப் பெயர். எ.கா. கொக்கு, காசு, பாட்டு, பந்து, சால்பு.

**2. குற்றியலிகரம் என்றால் என்ன?**

குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம்

குற்றியலுகரச் சொற்களின் முன் யகரம் வரின் உகரம் இகரமாய் திரியும். அரை மாத்திரை அளவு ஒலிக்கும். (எ.கா.) நாடு + யாது = நாடியாது; கொக்கு + யாது = கொக்கியாது.

## கற்பவை கற்றபின்

1. ஒன்று முதல் பத்து வரையுள்ள எண்ணுப்பெயர்களைப் பட்டியலிட்டு, குற்றியலுகரச் சொற்களை எடுத்து எழுதுக.

எண்ணுப்பெயர்கள் : ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து.

குற்றியலுகரச்சொற்கள் : ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, எட்டு, ஒன்பது, பத்து.

2. குற்றியலுகரப் எண்ணுப்பெயர்களில் குற்றியலுகரச்சொற்களை வகைப்படுத்துக.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து - மென்தொடர்க் குற்றியலுகரம்.

ஆறு - நெடில்தொடர்க் குற்றியலுகரம்; எட்டு, பத்து - வன்தொடர்க்குற்றியலுகரம்.

ஒன்பது - உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

3. குற்றியலுகரஎண்ணுப்பெயர்களின் மாத்திரை அளவில் கண்டுபிடியுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. ஒன்று | = | 1+1/2 +1/2 = 2 மாத்திரை | 2. இ+ர+ண்+டு = | | 1+1+1/2+1/2 = 3 மாத்திரை |
| 3. மூன்று | = | 2+1/2+1/2 = 3 மாத்திரை | 4. நான்கு | = | 2+1/2+1/2 = 3 மாத்திரை |
| 5. ஐந்து | = | 2+1/2+1/2 = 3 மாத்திரை | 6. ஆறு | = | 2 +1/2 = 2 1/2 மாத்திரை |
| 7. எட்டு | = | 1+1/2+1/2 = 2 மாத்திரை | 8. ஒன்பது | = | 1+1/2+1 +1/2 = 3 மாத்திரை |
| 9. பத்து | = | 1+1/2 +1/2 = 2 மாத்திரை | | | |

4. கு, சு, டு, து, பு, று ஆகிய குற்றியலுகரத்தை இறுதியாகக் கொண்ட ஈரெழுத்துச் சொற்களைத் திரட்டுக.

பாகு, காது, மாடு, மாறு, தூசு, ஆறு, காடு, ஆகு, பாடு, மாசு, மாது, காசு.

இயல் - 2

## காடு ( கவிதைப்பேழை )

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. :** 1. ஈன்றது 2. காடு + எல்லாம் 3. கிழங்கெடுக்கும்

**ஆ) நயம் அறிக.: பாடலில் உள்ள மோனை, எதுகை, இயைபு சொற்களை எடுத்து எழுதுக.**

மோனைச் சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| காடு | கார்த்திகை | சிங்கம் | குரங்கு |
| காய்கனி | காடெல்லாம் | சிறுத்தை | குடியிருக்கும் |

எதுகைச் சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| குரங்கு | கார்த்திகை | சிங்கம் | பச்சை |
| மரங்கள் | பார்த்திட | எங்கும் | நச்சர |

இயைபுச் சொற்கள் :

| | |
|---|---|
| மயில்நடிக்கும் | பொருள் கொடுக்கும் |
| கிழங்கெடுக்கும் | ஈன்றெடுக்கும் |

**இ) குறுவினா.**

**1. காட்டுப்பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?**

'கார்த்திகை மாதத்தில் ஏற்றும் கார்த்திகை விளக்குகள் போல' என காட்டுப்பூக்களுக்கு கார்த்திகை விளக்குகளை சுரதா உவமையாகக் கூறுகிறார்.

**2. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?**

- எல்லோரும் கூடி மகிழ்ந்திட குளிர்ந்த நிழலைத் தரும். • காட்டு விலங்குகளுக்கு தேவையான காய்கனிகளைத் தந்து வாழச் செய்கிறது. • வெயிலை மறைத்து அங்கே நிழல் தரும்.
- பல வகையான பொருள்களைத் தரும்.

**ஈ) சிறுவினா**

**1. காடு பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.**

- குரங்குகள் மரத்திலுள்ள கனிகளைப் பறித்து உண்ணும்.
- பன்றிகள் காட்டிலுள்ள கிழங்குகளைத் தோண்டி உண்ணும்.
- பன்றியின் செயலைக் கண்டு நஞ்சையுடைய பாம்புகள் கலக்கம் அடையும்.
- நரிக்கூட்டம் ஊளையிடும். • யானைகள் தழையை தின்றபடி நடைபோடும்.
- மயில்கள் நடனமாடும்.• சிங்கம், புலி, கரடி, சிறுத்தை போன்ற விலங்கினங்கள் எங்கும் அலைந்து திரியும்.

**உ) சிந்தனை வினா**

**1. காட்டை இயற்கை விடுதி என்று கூறக் காரணம் என்ன?**

- காடு இயற்கை தந்த கொடையாகும். காட்டில் கார்த்திகை மாதம் ஏற்றும் விளக்குகள் போல பூக்கள் பூத்து கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும்.
- இயற்கை தந்த இந்த காடு பல பறவைகள் மற்றும் விலங்குகள் தங்கி வாழும் இடமாக காட்சி அளிக்கிறது.
- காட்டில் குரங்குகள் கனியை உண்கின்றன. யானைகள் தழைகளை உண்டபடி நடக்கின்றன. மயில்கள் நடனமாடுகின்றன. நரிகள் ஊளையிடுகின்றன. சிங்கமும் புலியும் கரடியும் சிறுத்தையும் எங்கும் அலைகின்றன.
- இத்தகைய காரணங்களால் கவிஞர் காட்டை இயற்கை விடுதி எனக் கூறுகிறார்.

### கற்பவை கற்றபின்

**தொகைச்சொற்களை விரித்து எழுதுக.**

1. இருதிணை : அஃறிணை, உயர்திணை
2. நாற்குணம் : அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு
3. நவமணிகள் : வைரம், மரகதம், நீலம், கோமேதகம், பவளம், மாணிக்கம், முத்து, புட்பராகம், வைடூரியம்

## அப்படியே நிற்கட்டும் அந்த மரம் ( கவிதைப்பேழை )

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கோலிக்குண்டு 2. மண் ஒட்டிய பழங்கள் 3. பெயர் + அறியா 4. மனம் + இல்லை
5. நேற்றிரவு

ஆ) குறுவினா.

1. நாவல்மரம் எத்தனை தலைமுறைகளாக அங்கு நின்றிருந்தது?

நாவல்மரம் ஆறு தலைமுறைகளாக அங்கு நின்றிருந்தது.

2. சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர் யாவர்?

காக்கை, குருவி, மைனா, கிளிகள், பெயரறியாப்பறவைகள், அணில்கள், காற்று ஆகியவை சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர்கள் ஆவார்.

இ) சிறுவினா.

1. நாவல்மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

- ஊரின் வடகோடியில் இருந்த நாவல்மரம் தாத்தாவின் தாத்தா காலத்தில் நடப்பட்டது என தன் அப்பா சொல்ல கவிஞர் கேட்டிருக்கிறார்.
- கவிஞரின் ஐந்து வயதிலும் சரி, ஐம்பது வயதிலும் சரி மாறாமல் ஆறு தலைமுறைகள் கண்டு நிற்கிறது.
- மரத்தின் பச்சைக்காய்கறிகள் நிறம் மாறி செந்நிறம் ஆனவுடன் சிறுவர்கள் மனதில் பரவசம் பொங்கும்.
- பச்சை இலைகளின் நடுவில் கருநீல நிறத்தில் கோலிக்குண்டு போல நாவல்பழம் கிளைகளில் தொங்குவதைப் பார்த்தால் நாவில் நீர் ஊறும்.
- பறவைகள், அணில்கள், காற்று ஆகியவற்றால் உதிர்ந்திடும் பழங்களைப் பொறுக்க சிறுவர் கூட்டம் அலைமோதும் எனக் கவிஞர் நாவல்மரம் பற்றிய தன்னுடைய நினைவுகளைக் கூறுகிறார்.

ஈ) சிந்தனை வினா.

1. பெருங்காற்றில் வீழ்ந்த மரத்தைக் கவிஞர் ஏன் பார்க்க விரும்பவில்லை?

கவிஞருடைய தாத்தாவின் தாத்தா காலத்தில் நடப்பட்ட நாவற்பழமரத்தின் நிழலில் கவிஞரின் மகனும் விளையாடியுள்ளான்.

ஆறு தலைமுறைகளாக பெருவாழ்வு வாழ்ந்த அந்தமரம் ஒரு நாள் பேய்க்காற்றில் வேரோடு சாய்ந்து விட்டது. அதனை அறிந்து ஊர் மக்கள் அனைவரும் அதைப் பார்க்கச் சென்றனர். குன்றுகளின் நடுவே பெரிய மலை இருப்பது போல, கவிஞரின் மன ஓட்டங்களின் நடுவே அந்த மரம் பற்றிய நினைவுகள் உயர்ந்து நிற்கின்றது. அந்த மரம் அவரைப் பொருத்த அளவில் விழவில்லை. எனவே அந்த வீழ்ந்த மரத்தைச் சென்று பார்க்க விரும்பவில்லை.

## கற்பவை கற்றபின்

1. உங்கள் சுற்றுப்புறத்தில் உள்ள ஏதேனும் ஒரு மரம் குறித்து ஐந்து தொடர்கள் எழுதுக.

- பனைமரம் பூலோக கற்பக விருட்சம்
- நிலத்தடி நீரை சேமிக்கும் விஞ்ஞானி
- சுவாசிக்க ஆக்ஸினை தரும்
- பதநீர், கருப்பட்டி, பனைகிழங்கு போன்ற பல பொருட்களைத் தருகிறது.

2. உங்கள் பகுதிகளிலுள்ள மரங்களின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.

- பனைமரம்
- தென்னை
- பூவரசு
- ஆலமரம்
- பலாமரம்
- கொய்யா
- அரசமரம்
- நெல்லிமரம்
- புளியமரம்
- வேப்பமரம்
- புங்கை
- பாக்குமரம்
- மாமரம்
- வில்வமரம்
- தேக்குமரம்

## விலங்குகள் உலகம் (உரைநடை உலகம்)
## மதிப்பீடு :

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தந்தம் 2. முண்டந்துறை 3. காடு + ஆறு 4. அனைத்து + உண்ணி 5. நேரமாகி 6. வேட்டையாடிய

ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக : 1. புலி 2. பெண் 3. அடர்ந்த முடிகள்

இ) குறுவினா.

1. காடு - வரையறு.

- அடர்ந்த மரம், செடி கொடிகள், நறுங்காற்று, நன்னீர், வளம் நிறைந்த நிலம் நிறைந்தது.
- பறவைகள், விலங்குகள் போன்ற பல்லுயிர்களின் வாழ்விடம் காடு ஆகும்.

2. யானைகள் மனிதர்களை ஏன் தாக்குகின்றன?

- பொதுவாக யானைகள் மனிதர்களைத் தாக்குவது இல்லை. மனிதர்கள் யானையின் வழித்தடங்களில் குறுக்கிடும் போது தான் தாக்குகிறது.

3. கரடி அனைத்துண்ணி என அழைக்கப்படுவது ஏன்?

கரடி காய்கள், பழங்கள், உதிர்ந்த மலர்கள், தேன் போன்றவற்றையும் புற்றீசல், கரையான் போன்றவற்றையும் உணவாக உட்கொள்வதால் அனைத்துண்ணி என அழைக்கப்படுகிறது.

4. மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.

- சருகுமான்
- வெளிமான்
- மிளாமான்
- கவரிமான்

ஈ) சிறுவினா.

1. புலிகள் குறித்து நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக.

- புலிகள் தனித்து வாழும் இயல்பு உடையவை. ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வாழும். மற்ற புலிகள் அந்த எல்லைக்குள் செல்லாது.
- கருவுற்ற புலியானது தொண்ணூறு நாள்களில் இரண்டு அல்லது மூன்று குட்டிகளை ஈனும். அந்த குட்டிகளை இரண்டு ஆண்டுகள் வரை வளர்க்கும்.
- குட்டிப்புலிகள் வேட்டையாடக் கற்றவுடன் அவற்றுக்கான எல்லைகளையும் பிரித்து தனியாய் அனுப்பிவிடும்.
- புலி தனக்கான உணவை வேட்டையாடிய பின் வேறு எந்த விலங்கையும் வேட்டையாடுவதில்லை. அதனால் "பண்புள்ள விலங்கு" என்று அழைக்கப்படுகிறது.

உ) சிந்தனை வினா

1. காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுக.

- மரங்களை அழிப்பதால் பல உயிரினங்களின் வாழ்விடங்கள் அழிக்கப்படுகின்றன.
- மழை அளவு குறைகிறது.
- புவி வெப்பமடைதல் நடைபெறுகிறது. இதனால் மழைக்காலங்கள் மாறுபடுகின்றன.
- கார்பன் - டை - ஆக்ஸைடு வாயுவின் அளவு அதிகரிக்கின்றது. ஆக்ஸிஜன் அளவு குறைகின்றது.
- காட்டுவிலங்குகள் நாட்டுக்குள் புகுந்து மனிதர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

## கற்பவை கற்றபின்

1. விலங்குகள் தொடர்பான பழமொழிகளைத் திரட்டுக.

- கழுதைக் கெட்டா குட்டிச்சுவர்.
- கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை.
- யானைக்கும் அடி சறுக்கும்.
- நாய் வாலை நிமிர்த்த முடியாது.
- குரைக்கின்ற நாய் கடிக்காது.

## இந்திய வனமகன் (விரிவானம்)

### மதிப்பீடு :

அ) சிறுவினா

1. ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்?

- இயற்கையாக உருவாவது நாடு. ஆனால் ஜாதவ்பயேங் தன் தனி மனித முயற்சியால் காட்டை உருவாக்கியதை இங்கு காண்போம்.
- 1979 - ஆம் ஆண்டு பிரம்மபுத்திரா ஆற்றில் ஒரு பெருவெள்ளம் ஏற்பட்டது. வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட பாம்புகள் ஆற்றின் நடுவில் அமைந்த ஒரு தீவில் ஒதுங்கியது. அங்கு மரங்கள் இல்லாததால் பல பாம்புகள் வெப்பம் தாங்காமல் உயிருக்குப் போராடின. அதைக் கண்ட ஜாதவ்பயேங் அத்தீவில் காட்டை உருவாக்க விரும்பினார். இவர் முடிவை ஊர் மக்கள் கேலி செய்தனர்.

• ஜாதவ்பயேங் தன் கைகளில் கிடைத்த விதைகளை எடுத்துக்கொண்டு இத்தீவிற்கு வந்தார். விதைகளை விதைத்து நாள்தோறும் தண்ணீர் ஊற்றி வந்தார். இருப்பினும் ஒரு விதைக்கூட முளைக்கவில்லை. வனத்துறை ஆலோசனையுடன் மூங்கில் மட்டும் நட்டு வளர்த்தார்.

• அசாம் வேளாண்மைப்பல்கலைக்கழகப் பேராசிரியர். ஜாதுநாத் மரங்கள் வளர மண்புழுவும் சிவப்புக் கட்டெறும்புகளும் உதவும் என ஆலோசனைக் கூறினார். அதன் படி நூற்றுக்கணக்கான எறும்புகளை கொண்டு வந்து விட்டார். பசும்புற்கள் முளைக்கத் தொடங்கின. கால்நடைகளை வளர்த்து அதன் சாணங்களை உரமாக்கினார். பழத்தின் கொட்டைகளை விதையாக்கினார். அவை மரங்களாக மாறின.

• தொலை தூர செடிகளுக்கு சொட்டுநீர்ப்பாசனம் முறையைப் பின்பற்றினார். மரங்களில் பறவைகள் தங்கின. பறவைகளின் எச்சங்களால் காடுகள் உருவாகின். ஓர் நாள் காட்டின் நடுவில் இருந்த அவரின் மூங்கில் வீட்டை யானைகள் சிதைத்தது. அதைக்கண்ட அவர் யானைகளின் வருகை தன் உழைப்புக்கு கிடைத்த பரிசாக எண்ணினார்.

• முயல், மான், காட்டுமாடுகள் வரத் துவங்கின. யானைகள், பாம்புகள், கழுகுகள், காண்டாமிருகங்கள் போன்ற காட்டு விலங்குகள் வரத் தொடங்கின. 'காட்டின் வளம்' என அழைக்கப்படும் புலிகளும் வரத் தொடங்கின. அதன் பிறகு காட்டின் உணவுச்சங்கிலி நிறைவடைந்தது. அக்காட்டைப் பற்றி டைம்ஸ் ஆப் இந்தியா இதழில் செய்தி வந்தது. வனக்காவலர்களும், மக்களும் வியந்தனர்.

**ஆ) மூளைக்கு வேலை தரலாமா?** விடை: திருவள்ளுவர்.

## **நால்வகைக் குறுக்கங்கள்** ( கற்கண்டு )

### **மதிப்பீடு :**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 1. ஒன்று 2. பணம் கிடைத்தது 3. ஔகாரக்குறுக்கம்

**ஆ) குறுவினா**

**1. ஔகாரம் எப்பொழுது முழுமையாக ஒலிக்கும்?**

ஔ, வௌ என ஔகார எழுத்து, தனித்து வரும் இடங்களில் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது.

**2. சொல்லின் முதல், இடை, இறுதி ஆகிய இடங்களில் ஐகாரக்குறுக்கம் பெறும் மாத்திரை அளவு யாது?**

• சொல்லின் முதலில் வரும் போது ஒன்றரை மாத்திரை அளவில் இருக்கும்.

• சொல்லின் இடையிலும், இறுதியிலும் ஒரு மாத்திரை அளவில் இருக்கும்.

**3. மகரக்குறுக்கத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.**

• போன்ம் • மருண்ம் • பழம் விழுந்தது.

### **கற்பவை கற்றபின்**

**1. ஐகார, ஔகார, மகர, ஆய்தக்குறுக்கங்களுக்கு எடுத்துக்காட்டு எழுதுக.**

• ஐகார குறுக்கம் : வையம், தலைவன், வளையல், திண்ணை

• ஔகார குறுக்கம் : ஔவை, வௌவால், மௌவல்

• மகர குறுக்கம் : போன்ம், மருண்ம், வரும்வண்டி

• ஆய்தக்குறுக்கம் : முஃடீது, கஃறீது

## மொழியை ஆள்வோம்

**அ) 1. வனவிலங்குகளின் பராமரிப்பு - குறித்து எழுதுக.**

முன்னுரை :

இயற்கைத் தங்கும் இடம் காடுகள். அக்காடுகளின் உயிர்நாடி விலங்குகள். காட்டு விலங்குகள் காடுகளின் பாதுகாப்பாகும். காடுகள் காட்டு விலங்குகளின் பாதுகாப்பான உறைவிடமாகும்.

வனவிலங்குகள் :

யானை, புலி, சிறுத்தை, சிங்கம், மான், கரடி, காளைமாடு போன்ற அரிய விலங்குகள் காட்டில் வாழ்கின்றன. அவை எங்கும் அலைந்து திரியும். புலி தான் ஒரு காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு. காடுகள் விலங்கினங்களுக்கு புகலிடம் அளிக்கின்றன.

வனவிலங்குகள் பாதுகாப்பு :

மனிதர்கள் பாதுகாப்பிற்கு ரெட்கிராஸ் இருப்பது போல விலங்குகள் பாதுகாப்பிற்கு ப்ளூகிராஸ் இருக்கிறது. இந்தியாவில் பல தேசிய பூங்காக்கள், வனவிலங்கு காப்பகங்கள் உள்ளன. அவைகள் விலங்குகளின் பராமரிப்பிற்காக உருவாக்கப்பட்டவையாகும். விலங்குகள் பாதுகாப்பிற்காக பல சட்டங்களும் உள்ளன.

முடிவுரை :

தற்காலத்தில் மனிதர்களிடமிருந்து விலங்குகளையும், காடுகளையும் காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். உயிர்களில் வேறுபாடில்லை மனிதன், விலங்கு, பறவை என அனைத்தும் உயிரே. அவற்றை வாழ விடுவதும், பாதுகாப்பதும் அனைவரின் கடமையே ஆகும்.

**2. காட்டுயிர்கள் குறித்துக் கட்டுரை வரைக.**

முன்னுரை :

காட்டுயிர் என்பது வீட்டைச் சாராத அனைத்து தாவரங்கள், விலங்குகள் போன்றவற்றை உள்ளடக்கியது ஆகும். பாலைவனம், மழைக்காடு, சமவெளி என அனைத்து சூழ்நிலை மண்டலங்களிலும் காணப்படுகின்றது. உலகம் முழுவதும் காட்டுயிர்கள் மனித நடவடிக்கைகளால் தாக்கப்படுகின்றன. அவற்றைப் பாதுகாப்பது நமது கடமை மட்டுமல்ல, நமது தேவையும் கூட ஆகும்.

காட்டுயிர்கள் :

இந்தியாவில் காட்டுயிர்கள் என்பது இந்திய எல்லைக்கு உட்பட்ட பல்வேறு வகைகளைச் சார்ந்த காட்டு உயிரிகளை சேர்த்தே குறிக்கிறது. நூற்றுக்கும் மேற்பட்ட தேசிய பூங்காக்கள், சரணாலயங்கள் மூலம் வனவிலங்குகள் பாதுகாக்கப்படுகின்றன.

இயற்கை கல்வி :

மாணவர்கள், பள்ளிகள், கல்லூரிகள் என எல்லாத் தளங்களிலும் இயற்கை பாதுகாப்பு, வனவிலங்குகளின் முக்கியத்துவம் என சுற்றுச்சூழல் கல்வியை கற்க வேண்டும். மனிதனால் வனவிலங்குகள், காடுகள் அழிக்கப்படாமல் காக்க வேண்டியது அவசியமாகும்.

முடிவுரை :

காட்டுயிர்கள் உருவாக்கும் காட்டை மனிதனால் உருவாக்க முடியாது. காடுகள் இல்லாத உலகில் மனிதன் வாழவும் முடியாது. காட்டு உயிர்கள் பாதுகாக்கப்படுவது மனிதன் நலமாக வாழவும் உதவும் என்பதை மனிதர்கள் உணர வேண்டும். காட்டையும் காட்டுயிர்களையும் காக்க வேண்டும்.

**ஆ) வாக்கியப்பிழை நீக்கி எழுதுக.**

1. அறிவியலும், தொழில்நுட்பமும் விவசாயிகளைச் சென்று அடைந்த பின் தான் இந்த மாற்றம் ஏற்பட்டது.
2. நானும் தம்பியும் கடற்கரைக்குச் செல்வோம்.
3. எங்கள் வீட்டில் வளர்ந்து வந்த பூனை, நெடுநாட்களாகத் தொல்லை கொடுத்து வந்த எலிகளைத் துரத்தியது.

**எழுத்துப்பிழைகளை நீக்குக.**

1. சிறுவன் பந்தை வழிப்போக்கன் மேல் எறிந்தான். 2. பூனைக்கு இரவில் கண் நன்றாகத் தெரியும்.
3. தோட்டத்தில் வாழைமரம் குலை தள்ளியது.
4. தேன், பேரீச்சம்பழம், ஆப்பிள் தினமும் உண்ண நன்மை ஏற்படும்.
5. இரத்தல் தொழில் எவ்வளவு இழிவானது என்பதை இறைவன் அறிய வேண்டும்.

**சொற்களை முறைப்படுத்திப் பொருள் தரும் வாக்கியமாக மாற்றி எழுதுக.**

1. இராமலிங்க அடிகள் வாடிய பயிரைக் கண்டு வருந்தி நின்றார்.
2. வருடத்திற்கு ஒரு முறையாவது உல்லாசப்பயணம் செல்ல வேண்டும்.
3. பறவைகள் ஆயிரக்கணக்கான மைல்கள் பறக்கக்கூடியவை.

**சொற்களின் / சொற்றொடர்களின் பொருளுணர்ந்து சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. விருந்தோம்பல் என்பது நம் தொன்றுதொட்டு பின்பற்றும் பழக்கம் ஆகும்.
2. மக்கள் நலனுக்காக மந்திரி பரிந்துரைக்கடிதம் எழுதினார்.

**பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

1. கூட்டுறவு வேளாண்மைக் கழகங்கள் உணவுப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கின.

**கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக.**

1. பாகற்காயும், வெண்டைக்காயும் உடம்பிற்கு நல்லது.

**அடைப்புக்குறிகளுக்குள் உள்ள வினைச்சொல்லைக் கோடிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

1. கடைக்காரர் நாளை புத்தகம் தருவேன் என்று கூறி பணத்தைக் கேட்டார்.

**இ) கருத்துணர்திறன் (நல்ல மனம் வாழ்க)**

1. மன்னரின் ஆசை என்ன?
   இறைவனுக்கு புதிய தேர் செய்ய வேண்டும் என மன்னர் ஆசைப்பட்டார்.
2. கோயில் அர்ச்சகர் மரத்தை ஏன் வெட்டவில்லை?
   நிழல் தரும் மரத்தை கோயில் அர்ச்சகர் வெட்ட விரும்பவில்லை.
3. அர்ச்சகரின் எண்ணத்தைக் கேட்ட மன்னர் மகிழ்ந்தாரா? இல்லையா?
   அர்ச்சகரின் எண்ணத்தைக் கேட்ட மன்னர் மகிழ்ந்தார்.

## திருக்குறள் (வாழ்வியல்)

## மதிப்பீடு

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 1. தீங்கு தராத சொற்களைப் பேசுதல் 2. பொறாமை உள்ளவன் 3. பொருள் + செல்வம் 4. யாது + எனின் 5. தன்னெஞ்சு 7. தீதுண்டோ

**ஆ) சிறந்த அரசின் பணிகளை வரிசைப்படுத்தி எழுதுக.**

ஆ. பொருள் வரும் வழிகளை அறிதல் ஈ, பொருள்களைச் சேர்த்தல்
இ. சேர்த்த பொருளைப் பாதுகாத்தல் அ. பொருளைப் பிரித்துச் செலவு செய்தல்

**இ) குறுவினா**

**1. எப்போது தன்நெஞ்சே தன்னை வருத்தும்?**

- ஒருவர் தன் நெஞ்சு அறிய பொய் சொல்லக்கூடாது.
- அவ்வாறு கூறினால் அவர் நெஞ்சமே அவனை வருத்தும்.

**2. வாழும் நெறி யாது?**

தன் நெஞ்சில் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பே வாழும் நெறி ஆகும்.

**3. உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் யார்?**

உள்ளத்தில் பொய் இல்லாமல் வாழ்பவர் உலகத்தார் உள்ளங்களில் இருப்பார்.

**ஈ) கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு திருக்குறள் அமைக்க.**

1. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
   செல்வத்துள் எல்லாம் தலை.
2. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
   பூரியார் கண்ணும் உள.

**உ) பின்வரும் பத்திக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்ந்தெடு.**

3. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
   உள்ளத்துள் எல்லாம் உளன்.

## புலி தங்கிய குகை ( கவிதைப்பேழை )

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 1. எங்கு 2. யாண்டு + உளனோ? 3. கல்லளை

**ஆ) குறுவினா.**

**1. தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் குறிப்பிடுகிறார்?**

புலி தங்கிச் சென்ற குகையைத் தம் வயிற்றுக்குத் தாய் உவமையாகக் குறிப்பிடுகிறார்.

**இ) சிறுவினா.**

**1. தம் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

சிறு அளவிலான என் வீட்டின் தூணைப் பற்றிக் கொண்டு உன் மகன் எங்கே? என்று ஏதும் அறியாதவள் போல நீ என்னை கேட்கிறாய். அவன் எங்கு உள்ளான் என்று எனக்குத் தெரியவில்லை. ஆயினும், "புலி தங்கிச் சென்ற குகை போல" அவனைப் பெற்றெடுத்த வயிறு என்னிடம் உள்ளது. அவன் இங்கு இல்லை என்றால் போர்க்களத்தில் தான் இருக்கக்கூடும். அங்கு போய் காண்பாயாக என்று தம் மகன் குறித்து தாய் கூறினாள் என்கிறது காவற்பெண்டு பாடிய புறநானூற்றுப் பாடல்.

**ஈ) சிந்தனை வினா.**

**1. தாய் தன் வயிற்றைப் புலி தங்கிச்சென்ற குகையோடு ஒப்பிடுவது ஏன்?**

புறநானூற்றுப் பாடல்கள் பெண்களின் வீரத்தைச் சிறப்பாகவும் பெருமையாகவும் எடுத்துரைக்கின்றது. நாட்டைக் காக்க வீட்டில் இருப்போர் போர்க்களம் செல்வது தன் கடமை எனக் கருதினர். அத்தகைய பண்பாட்டை பின்பற்றும் தாய் தன் மகனுடைய வீரத்தை உணர்த்தும் விதமாகத் தன் வயிற்றைப் புலி தங்கிச் சென்ற குகையோடு ஒப்பிடுகிறாள்.

### கற்பவை கற்றபின்

**1. சங்க காலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை அறிந்து எழுதுக.**

ஔவையார், காவற்பெண்டு, வெள்ளிவீதியார், ஒக்கூர் மாசாத்தியார், வெண்ணிக்குயத்தியார், பொன்முடியார், காக்கைப்பாடினியார், நப்பசலையார்.

## பாஞ்சை வளம் ( கவிதைப்பேழை )

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வாரணம் 2. முயல் 3. மாடிவீடு 4. பூட்டும் + கதவுகள் 5. தோரணம் + மேடை 6. வாசலலங்காரம்

**ஆ) பொருத்துக.**

1. பொக்கிஷம் - செல்வம் 2. சாஸ்தி - மிகுதி 3. விஸ்தாரம் - பெரும்பரப்பு 4. சிங்காரம் - அலங்காரம்

**இ) குறுவினா.**

**1. பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டைகள் பற்றிக் கூறுக.**

பாஞ்சாலங்குறிச்சி நகரில் பல சுற்றுகளாகக் கோட்டைகள் இருக்கும். அவை மிகவும் வலிமையாகவும் மதில்களால் சூழப்பட்டவையாகவும் இருக்கும்.

**2. பாஞ்சாலங்குறிச்சியின் இயற்கை வளம் எத்தகையது?**

- பூஞ்சோலைகளும், சந்தனமரச்சோலைகளும், நெல்வயல்களும், பாக்குத் தோப்புகளும் அந்நாட்டிற்கு அழகு செய்யும். • சோலைகளில் கூவும் குயிலும் விளையாடும் மயிலும் நாட்டின் வளத்தைக் கூறும்.

**ஈ) சிறுவினா.**

**1.பாஞ்சாலங்குறிச்சியின் வீடுகள் எவ்வாறு இருக்கும்?**

• பாஞ்சாலங்குறிச்சியின் வீடுகள்தோறும் மணிகளால் அலங்கரிக்கப்பட்ட உயர்ந்த மேடைகள் அமைந்திருக்கும். • வீடுகள் எல்லாம் மதில் சுவர்களால் சூழப்பட்டு மாடி வீடுகளாக இருக்கும். • செல்வம் நிறைந்த அந்த வீடுகளின் கதவுகள் மிகவும் உறுதியாகவும், நேர்த்தியாகவும் இருக்கும்.

2. பாஞ்சாலங்குறிச்சியின் வீரத்துக்குச் சான்றாகும் நிகழ்வுகள் பற்றி எழுதுக.
- தன்னைப் பிடிக்க வரும் வேட்டைநாயை எதிர்த்து விரட்டும் முயல்.
- நீர் நிலையின் ஒரே துறையில் பசுவும் புலியும் நின்று பால் போன்ற தண்ணீரைக் குடிக்கும் காட்சி. இவை இரண்டும் வீரம் மிகுந்த நாடு பாஞ்சாலங்குறிச்சி என்பதற்குச் சான்றாகும்.

**உ) சிந்தனை வினா.**

1. நாட்டுப்புறக்கதைப் பாடல்களில் கட்டபொம்மன் பெரிதும் புகழப்படக்காரணம் என்ன?
- நாட்டுப்புறக்கதைப் பாடல்கள் என்பது வாய்மொழி இலக்கியமாகும்.
- ஆங்கிலேயர்கள் எதிர்த்துப் போரிட்ட மன்னர்கள் சிலருள் கட்டபொம்மனும் ஒருவர் ஆவார்.
- வரி செலுத்தாமல் வரி கேட்டு வந்த ஆங்கிலேயருடன் விவாதம் செய்தார்.
- இந்த வீரம் தமிழர்கள் கட்டபொம்மனை பெரிதும் மதிக்கக் காரணமாகியது.
- தமிழர்களின் வீரத்தை உலகறிய செய்யும் வகையில் "கட்டபொம்மன் கதைப்பாடல்கள்" பாடப்பட்டு பெரிதும் புகழப்படுகிறது.

**திட்டமிடுதல் : மாதிரி அட்டவணை தயாரித்தல்**

**விடைகள்**

1. விடுமுறை காலத்தில் வெளியூர் செல்ல குமார் திட்டமிட்டான்.
2. மூன்று ஆறுகள் கூடும் இடம். (கங்கை, யமுனை, சரஸ்வதி)
3. பல வகையான மீன்கள் இருக்கும். 4. பல நாட்டுப் பறவைகள், பறவைகள் பூங்காவில் இருக்கும்.
5. தாஜ்மகால் உலக அதிசயங்களுள் ஒன்றாகும்.

## தேசியம் காத்த செம்மல் முத்துராமலிங்கத்தேவர் (உரைநடை உலகம்)

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 1. சாயல்குடி 2. நேதாஜி 3. திரு.வி.க.

**ஆ) குறுவினா.**

1. முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டி பெரியார் கூறியது என்ன?
- தேசியம் உடல், தெய்வீகம் உயிர் எனக் கருதி மக்கள் தொண்டு செய்தவர் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்.
- வீரப்பேச்சால் தியாகிகளையும், விவேகப் பேச்சால் அறிவாளிகளையும் உருவாக்கியவர். உண்மையை மறைக்காமல் வெளியிடும் துணிச்சல் பெற்றவர். சுத்தத்தியாகி என்று தந்தைப்பெரியார் பாராட்டினார்.

2. முத்துராமலிங்கத்தேவரின் பேச்சுக்கு வாய்ப்பூட்டுச் சட்டத்தின் மூலம் தடைவிதிக்கப்படக் காரணம் யாது?

முத்துராமலிங்கத்தேவர் மேடைகளில் ஆற்றிய உரையைக் கேட்டு மக்கள் ஆங்கில ஆட்சிக்கு எதிராக வீறு கொண்டு எழுந்தனர். அதனால் அச்சமடைந்த ஆங்கில அரசு அவருக்கு "வாய்ப்பூட்டுச்சட்டம்" போட்டு மேடைகளில் அரசியல் பேசக்கூடாது என்று தடை விதித்தது.

3. முத்துராமலிங்கத்தேவர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக.
- சிலம்பம் • குதிரையேற்றம் • துப்பாக்கிச்சுடுதல் • சோதிடம் • மருத்துவம்
- தமிழ், ஆங்கில மொழியில் சொற்பொழிவு ஆற்றும் திறன்

**இ) சிறுவினா**

1. நேதாஜியுடன் முத்துராமலிங்கத் தேவர் கொண்ட தொடர்பு பற்றி எழுதுக.
- வங்கச்சிங்கம் என்று அழைக்கப்பட்ட நேதாஜி சுபாஷ் சந்திர போசை தமது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார் முத்துராமலிங்கத்தேவர் அவர்கள்.
- 1939 - ஆம் ஆண்டு செப்டம்பர்த்திங்கள் ஆறாம் நாள் முத்துராமலிங்கத்தேவரின் அழைப்பை ஏற்று நேதாஜி மதுரைக்கு வந்தார்.
- நேதாஜி தொடங்கிய இந்திய தேசிய இராணுவத்தில் முத்துராமலிங்கத் தேவர் முயற்சியால் ஏராளமான தமிழர்கள் இணைந்தனர்.
- விடுதலைக்குப்பின் முத்துராமலிங்கத்தேவர் "நேதாஜி" என்ற பெயரில் வார இதழ் ஒன்றை நடத்தினார்.

2. **தொழிலாளர் நலனுக்காக முத்துராமலிங்கத்தேவர் செய்த தொண்டுகள் யாவை?**

- மதுரையில் தொழிலாளர் நலன் கூட்டமைப்பு நடத்திய போராட்டத்தில் தேவர் தலைமை தாங்கி நடத்தினார்.
- அதற்காக 1938 - ஆம் ஆண்டு ப.ஜீவானந்தத்துடன் இணைந்து கைது செய்யப்பட்டு சிறை சென்றார்.
- பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வேண்டுமென்று போராடினார்.
- விவசாயிகள் நலனுக்காக "ஜமீன் விவசாயிகள் சங்கம்" ஏற்படுத்தினார்.

**ஈ) சிந்தனை வினா**

1. **சிறந்த தலைவருக்குரிய பண்புகள் எவை என நீங்கள் கருதுகிறீர்கள் ?**

- செயல்கள், எண்ணங்களில் பொதுநலன் அக்கறை மேலோங்கி இருக்க வேண்டும்.
- அறிவு, அனுபவம், மனிதம் கொண்டவர் சிறந்த தலைவராக இருக்க முடியும்.
- மக்களின் வறுமை, இன்னல்களை போக்குபவரே சிறந்தத்தலைவர் ஆவார்.
- மனிதர்களிடம் உயர்வு தாழ்வு மற்றும் ஆண் பெண் வேறுபாடு பார்க்காமல் சமமாக நடத்த வேண்டும்.
- சிறந்த தலைவர், சிறந்த தலைவர்களை உருவாக்குபவராகவும் திகழ வேண்டும்.

## கற்பவை கற்றபின்

**நாட்டுக்கு உழைத்த சிறந்த பிறதலைவர்களைப் பற்றிய செய்திகளைத் திரட்டி எழுதுக.**

சுபாஷ் சந்திர போஸ், அம்பேத்கர், காந்தியடிகள் போன்ற தலைவர்கள் பற்றிய செய்திகளைத் திரட்டி வருக.

## கப்பலோட்டிய தமிழர் (விரிவானம்)

## மதிப்பீடு :

**ஆ) சிறுவினா : வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை :**

தமிழ்நாட்டின் முத்துவளம் செழித்த தூத்துக்குடி நகரில் பெருமையைத் தன் பெருமையாக்கிக் கொண்டவர் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார்.

**இளமைப்பருவம் :**

வ.உ.சி. அவர்கள் 1872 - ஆம் ஆண்டு செப்டம்பர் 5 - ஆம் நாள் தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் பிறந்தார். பெற்றோர் உலகநாதபிள்ளை, பரமாயி அம்மாள் ஆவர். கல்லூரிப்படிப்பை முடித்த வ.உ.சி. தன் தந்தையைப் போல வழக்கறிஞர் ஆனார். ஏழைகளுக்காக வாதாடினார். சிறந்த வழக்கறிஞர் என்று போற்றப்பட்டார்.

சுதேசக்கப்பல் :

இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்தார். வெள்ளையர்களின் கப்பலில் கூலி வேலை செய்யும் நம் மக்களின் அடிமைத்தனத்தை ஒழிக்க "சுதேச கப்பல் கம்பெனியை" உருவாக்கினார். அன்று முதல் சுதேசக்கப்பல் வணிகம் வளர்ந்தது. "வந்தே மாதரம்" என்று தெற்கில் பாரதியும் வடக்கில் "சுதந்திரம் எனது பிறப்புரிமை" என்று பாலகங்காதர திலகரும் முழக்கமிட்டனர்.

சிறை வாழ்க்கை :

சுதந்திர வேட்கையை மக்கள் மனதில் உதிக்கசெய்த வ.உ.சியை ஆங்கிலஅரசு எதிரியாக எண்ணி சிறைத்தண்டனை அளித்தது. சிறையில் வ.உ.சி. கடுமையான வேலைகளைச் செய்தார். சணல் நூற்றார். கல் உடைத்தார். செக்கிழுத்தார். சிறையில் தொல்காப்பியம், இன்னிலை ஆகிய நூல்களைப் படித்தார். "ஆலன்" என்பவர் இயற்றிய ஆங்கில மொழி நூலை மனம் போல் வாழ்வு என்று தமிழில் மொழிபெயர்த்தார். மெய்யறிவு, மெய்யறம் என்ற நூல்களை இயற்றினார்.

முடிவுரை :

சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட வ.உ.சி. "பாயக்கண்பது சுதந்திர வெள்ளம்; பணியக் காண்பது வெள்ளையர் உள்ளம்" என்று அனைவரும் பாடும் நாள் வர வேண்டும் என எண்ணினார். நாட்டு மக்களின் விடுதலைக்காகப் போராடிய வ.உ.சி. 1936 - ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 - ஆம் நாள் இயற்கை எய்தினார்.

## கற்பவை கற்றபின்

**ஆ) தொடர்களில் உள்ள வண்ணச்சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.**

1. வள்ளல் குமணன் <u>இன்மை</u>யால் வாடி வந்த <u>கவிஞருக்குத்</u> தனது தலையைத் <u>தந்து</u> மங்காத கீர்த்தி பெற்றான்.

2. <u>காவில்</u> பூத்த மண மலர்களில் <u>வண்டுகள்</u> மொய்த்தும் பண்பாடி <u>தேன்</u> உண்டன.

3. பசு போல் <u>அமைதியும், வேங்கை</u> போல <u>வீரமும், களிறு</u> போல உழைப்பும், மனிதனுக்கு வேண்டும்.

**ஈ) நிறுத்தற்குறிகளை இடுக.**

1. அரசர், வேட்டைக்காகக் கானகம் சென்றார். 2. என்ன? ஆணவமான பேச்சு.

3. இப்படத்தின் அழகு தான் என்னே!

## வழக்கு ( கற்கண்டு )

## மதிப்பீடு :

**அ) பொருத்துக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. பந்தர் | - | கடைப்போலி | 2.மைஞ்சு | - | முதற்போலி |
| 3.அஞ்சு | - | முற்றுப்போலி | 4. அவையர் | - | இடைப்போலி |

**ஆ) குறுவினா.**

**1. வழக்கு என்றால் என்ன?**

நம் முன்னோர்கள் எந்தெந்தச் சொற்களை என்னென்ன பொருளில் பயன்படுத்தினார்களோ அச்சொற்களை அவ்வாறே பயன்படுத்துவதை வழக்கு என்பர்.

**2. தகுதி வழக்கின் வகைகள் யாவை?**

தகுதி வழக்கு இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என மூன்று வகைப்படும்.

**3. வாழைப்பழம் மிகவும் நஞ்சு விட்டது - இத்தொடரில் இடம் பெற்றுள்ள போலிச் சொல்லைக் கண்டறிக. அதன் சரியான சொல்லை எழுதுக.**

போலி - நஞ்சு விட்டது சரியான சொல் - நைந்து விட்டது.

**ஈ) கீழ்க்காணும் ஊர்களுக்குரிய மரூஉச் சொற்களைக் கண்டறிக.**

1. திருச்சி 2. கோவை 3. புதுவை 4. நெல்லை 5. மயிலை 6. உடுமலை 7. அம்பை

**உ) தொடர்களை எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எனப் பிரிக்க.**

| | எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|---|
| 1. | வீரர்கள் | காத்தனர் | வீட்டைக் |
| 2. | பொதுமக்கள் | தீயிட்டு எரித்தனர் | அந்நியத் துணிகளை |
| 3. | பாண்டியன் | மீன்கொடி பறந்தது | கொற்கைத் துறைமுகத்திலே |
| 4. | திருக்குறளை | யார்? | எழுதியவர் |
| 5. | கபிலர் | புலவர் | குறிஞ்சிப் பாட்டை |

இயல் - 4

## கலங்கரை விளக்கம் ( கவிதைப்பேழை )

## மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 1. சாந்தினால் பூசப்படுவது 2. கடல் 3. மரக்கலங்கள் 4. மதலை

ஆ) குறுவினா.

1. மரக்கலங்களைத் துறை நோக்கி அழைப்பது எது?

கடலில் துறை அறியாமல் கலங்கும் மரக்கலங்களைத் துறை நோக்கி அழைப்பது கலங்கரை விளக்கம் ஆகும்.

2. கலங்கரை விளக்கில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?

கலங்கரை விளக்கில் இரவு நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்.

இ) சிறுவினா.

1. கலங்கரை விளக்கம் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறும் கருத்துகளை எழுதுக.

- கலங்கரை விளக்கம் வானம் கீழே விழாமல் தாங்கிப் பிடிக்கும் தூண் போலத் தோற்றம் அளிக்கிறது.
- ஏணியைக் கொண்டு ஏற முடியாத உயரமுள்ளது.
- வைக்கோல் கற்றையால் வேயப்படாது; திடமான சாந்து கொண்டு பூசப்பட்ட வானம்முட்டும் மாடத்தை உடையது.
- இந்த கலங்கரை விளக்கில் இரவில் எரியும் விளக்கானது திசை தெரியாமல் தவிக்கும் மரக்கலங்களை தன் துறை நோக்கி அழைத்து வருகிறது.

ஈ) சிந்தனை வினா.

1. கலங்கரை விளக்கம் கடல் ஓட்டிகளைத் தவிர வேறு யாருக்கெல்லாம் பயன்படும் என நீங்கள் கருதுகிறீர்கள் ?

- கடலில் மீன் பிடிக்கும் மீனவர்கள் கரைக்குத் திரும்ப பயன்படும்.
- கடற்பயணம் சென்ற கடற்பயணிகள் கரை திரும்ப பயன்படும்.

## கவின் மிகு கப்பல் ( கவிதைப்பேழை )

### மதிப்பீடு :

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காற்று 2. வங்கத்தில் 3. கடல் 4. பெருமை + கடல் 5. இன்றாகி 6. இரவு - இயற்கை

ஆ) பொருத்துக.

1. வங்கம் - கப்பல் 2. நீகான் - நாவாய் ஓட்டுபவன்

3. எல் - பகல் 4. மாட ஒள்ளெரி - கலங்கரை விளக்கம்

இ) குறுவினா.

1. நாவாயின் தோற்றம் எவ்வாறு இருந்ததாக அகநானூறு கூறுகிறது?

உலகமே கிளிர்ந்து எழுந்து வருவது போல அழகு பொருந்திய தோற்றத்தை உடையது நாவாய் என்று கூறுகிறது அகநானூறு.

2. நாவாய் ஓட்டிகளுக்குக் காற்று எவ்வாறு துணை செய்கிறது?

வீசுகின்ற காற்றானது நாவாயை அசைத்துச் செலுத்த நாவாய் ஓட்டிகளுக்கு உறுதுணையாக நிற்கிறது.

ஈ) சிறுவினா.

1. கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?

- உலகமே கிளிர்ந்து செல்லும் அளவு பெரிய, அழகு பொருந்திய தோற்றத்தை உடையது நாவாய்.
- புலால் நாற்றம் வீசும் அலையை உடைய பெரிய கடலின் நீரைப் பிளந்து கொண்டு செல்லும் நாவாய்.
- இரவும் பகலும் தொடர்ந்து வீசும் காற்றானது நாவாயை அசைத்துச் செல்லும்.
- அகன்ற துறைமுகத்தில் கலங்கரை விளக்கத்தில் ஒளியால் சரியான திசை அறிந்து நாவாயை ஓட்டுபவன் நாவாயைச் செலுத்துவான்.

உ) சிந்தனை வினா.

1. தரைவழிப்பயணம், கடல்வழிப்பயணம் ஆகியவற்றுள் நீங்கள் விரும்புவது எது? ஏன்?

நான் விரும்பும் பயணம் கடல்வழிப் பயணம். கடல் பயணம் அலைகள், மீன்கள் எனக் காண்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். இரவில் கப்பலில் இருந்து ஆகாயத்தைக் காணும் காட்சி அழகாக இருக்கும்.

## கற்பவை கற்றபின்

**1. கடலில் கிடைக்கும் பொருள்களின் பெயர்களைத் தொகுக்க.**

● சங்குகள் ● நண்டுகள் ● உப்பு ● சிப்பிகள் ● முத்துகள் ● கனிமங்கள் ● மீன்கள்

2. மாணவர்கள் தாங்களாகவே கடற்பயணம் என்னும் சிறுகதை ஒன்றைக் கூற வேண்டும்.

## தமிழர்களின் கப்பற்கலை (உரைநடை உலகம்)

### மதிப்பீடு :

| | | | |
|---|---|---|---|
| **அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** | 1. ஓடம் | 2. முந்நீர் | 3. சுக்கான் |
| **ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.** | 1. தொகுதி | 2. நங்கூரம் | 3. கண்ணடை |

**இ) பொருத்துக.**

1. எரா - அடிமரம் 2. பருமல் - குறுக்குமரம்

3. மீகாமன் - கப்பலைச் செலுத்துபவர் 4. காந்தஊசி - திசைக்காட்டும் கருவி

**ஈ) தொடர்களில் அமைத்து எழுதுக.**

1. நீரோட்டம் : கடல் நீரோட்டங்களின் திசையை தமிழர்கள் தம் பட்டறிவால் நன்கு அறிந்திருந்தனர்.
2. காற்றின் திசை : காற்றின் திசை அறிந்து கப்பலைச் செலுத்தினர்.
3. வானியல் அறிவு : மாலுமிகள் சிறந்த வானியல் அறிவைப் பெற்றிருந்தனர்.
4. ஏற்றுமதி : கடல் வணிகம் மூலம் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைபெற்றது.

**உ) குறுவினா.**

**1. "தோணி" என்னும் சொல்லின் பெயர்க்காரணத்தைக் கூறுக.**

எடைக்குறைந்த பெரிய மரங்களின் உட்பகுதியைக் குடைந்து தோண்டப்பட்டு பயன்படுத்தியதால் தோணி என அழைக்கப்பட்டன. இவை சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தினார்.

**2. கப்பல் கட்டும் போது மரப்பலகைகளுக்கு இடையே தேங்காய் நார் அல்லது பஞ்சு வைப்பதன் நோக்கம் என்ன?**

- கப்பல் கட்டும் போது மரப்பலகைகளுக்கு இடையே தேங்காய்நார் அல்லது பஞ்சு வைத்து ஆணி கொண்டு நன்றாக அறைந்தனர்.
- சுண்ணாம்பையும், சணலையும் அரைத்து அதில் எண்ணெய் கலந்து கப்பலின் அடிப்பகுதியில் பூசினர். இதனால் கப்பல் நெடுங்காலம் பழுதுபடாமல் உழைத்தது.

**3. கப்பல் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.**

● எரா ● வங்கு ● பாய்மரம் ● நங்கூரம் ● பருமல் ● கூம்பு ● சுக்கான் ஆகியவை கப்பலின் உறுப்புகளாகும்.

**ஊ) சிறுவினா.**

**1. சிறிய நீர்நிலைகளையும், கடல்களையும் கடக்கத் தமிழர்கள் பயன்படுத்திய ஊர்திகளின் பெயர்களை எழுதுக.**

● தமிழர்கள் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்திய ஊர்திகளின் பெயர்கள் தோணி, ஓடம், படகு, புணை, மிதவை, தெப்பம் போன்றவை. ● கடல்களைக் கடக்கப் பயன்படுத்திய பெரிய அளவிலான ஊர்திகள் கலம், வங்கம், நாவாய் போன்றவை இவற்றையெல்லாம் கொண்டு தமிழர்கள் கடல் பயணம் மேற்கொண்டனர்.

**2. பண்டையத்தமிழரின் கப்பல் செலுத்தும் முறை பற்றி எழுதுக.**

- தமிழர்கள் காற்றின் திசை அறிந்து கப்பல் செலுத்தும் முறையே அறிந்திருக்கின்றனர்.
- காற்று வீசும் திசை, கடல் நீரோட்டத்தின் திசை ஆகியவற்றை நன்கு அறிந்து உரிய காலத்தில் சரியான திசையில் கப்பலைச் செலுத்தினர்.
- கப்பல் ஓட்டிய மாலுமிகள் சிறந்த வானியல் அறிவைப் பெற்றிருந்தனர். புயல், மழை தோன்றும் காலம் அறிந்து கப்பல்களைச் செலுத்தினர்.

3. கப்பல் பாதுகாப்பானதாக அமையத் தமிழர்கள் கையாண்ட வழிமுறைகள் யாவை?

- கப்பல் கட்டுவதற்கு உரிய மரங்களை தேர்ந்தெடுப்பதில் தமிழர்கள் மிகுந்த கவனம் செலுத்தினர்.
- தண்ணீரால் பாதிப்பு அடையாத மரங்களையே கப்பல் கட்டப் பயன்படுத்தினர்.
- நீர்மட்ட வைப்பிற்கு வேம்பு, இலுப்பை, புன்னை, நாவல் போன்ற மரங்களைப் பயன்படுத்தினர்.
- பக்கங்களுக்குத் தேக்கு, வெண்தேக்கு போன்ற மரங்களைப் பயன்படுத்தினர்.
- மரங்களையும், பலகைகளையும் இணைக்கும் போது அவற்றுக்கு இடையே தேங்காய்நார் அல்லது பஞ்சு இவற்றில் ஒன்றை வைத்து இறுக்கி ஆணிகளை அறைந்தனர். மரத்தாலான ஆணிகளையே பயன்படுத்தினர்.
- பெருந்திரளான மக்களையும், பொருள்களையும் ஏற்றிச் செல்லும் வகையில் பாதுகாப்பான வலிமை மிக்க கப்பல்களை உருவாக்கினர்.

எ) சிந்தனை வினா.

**இக்காலத்தில் மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்குக் கடற்பயணத்தைப் பெரிதும் மேற்கொள்ளாதது ஏன் எனச் சிந்தித்து எழுதுக.**

- தற்போது விமானம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு கடல்வழிபயணம் குறைந்துள்ளது.
- வான்வழிப்பயணம் கடற்வழிப் பயணத்தைக் காட்டிலும் குறைவான நேரத்தைக் கொண்டதாகவும் உள்ளது.

ஏ) கீழ்க்காணும் தொடர்களைக் காணும் பிழைகளைத் திருத்தி எழுதுக.

1. பேருந்து நிறுத்துமிடத்தில் பள்ளிக்கூடம் இருக்கிறது.
2. இன்றும் நம் நாட்டில் பெருவாரியான மக்கள் உள்ளார்களே.
3. ஏரிகளில் மழைநீர் சேமித்தால் கிணறுகளில் நீர் வற்றாது.
4. ஆலமரத்தின் விழுதினைப் பாம்பென்று குரங்கு அஞ்சியது.
5. கொஞ்சம் வெந்நீர் வைத்துத் தந்தால் எண்ணெய் தேய்த்துக் கொள்வேன்.

ஐ) தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.

1. நிலவைப் பிடித்து சில கறைகள் துடைத்துக் குறுமுறுவல் பதித்தமுகம்.
2. கொல்லைக் கிணற்றிலே வெண்ணிலா பந்து.
3. எள்ளுச் செடியிலே வெள்ளைப்பூ பூத்தது.
4. பெட்டிக்கடையிலே வெற்றிலைக்குச் சுண்ணாம்பு கேட்டுவா.
5. மரக்கடை பக்கம் போகாதே இழைப்புளி தூசி ஒவ்வாது.

ஒ) தேவையான இடங்களில் வல்லினமெய்களை நீக்கி எழுதுக.

1. ஊறுகாய் வைத்தால் பழையசோறு உள்ளே போகாதா?
2. படிக்காத பெண்ணின் தீமை! என்ன பயன் விளைப்பாள் அந்த ஆமை.

## கற்பவை கற்றபின்

3. கப்பலைக் குறிக்கும் வேறு பெயர்கள் :

## ஆழ்கடலின் அடியில் ( விரிவானம் )

### மதிப்பீடு :

அ) சிறுவினா : **ஆழ்கடலின் அடியில் கதையைச் சுருக்கி எழுதுக.**

அறிவியல் புனைக்கதைகளின் தலைமகன் என்று அழைக்கப்படும் "ஜீல்ஸ்வெர்ன் என்பவர் எழுதிய ஆழ்கடலின் அடியில்" என்னும் புதினத்தின் மொழிப்பெயர்ப்பின் நம் பாடப்பகுதி. 1886 – ஆம் ஆண்டு பியாரி என்னும் விலங்கியல் பேராசிரியர், கடலில் செல்லும் பெரிய கப்பலைத் தாக்கும் உலோகம் போன்ற உடலைக் கொண்ட ஒரு விந்தையான விலங்கைத் தேடிச்சென்றார். அமெரிக்காவின் நியூயார்க் நகரில் இருந்து புறப்பட்ட அந்த போர்க்கப்பலில் ஃபராக்ட், கான்சில்நெட் முதலியோரும் உடன் இருந்தனர்.

அவர்கள் மூன்று மாதம் தேடியும் அவ்விலங்கு கிடைக்காததால் கிளம்ப முற்பட்டனர். அப்பொழுது அவ்விலங்கு அவர்களைத் தாக்கியது. அவர்களின் துப்பாக்கிக் குண்டுகளும், ஈட்டிகளும் அதனை ஒன்றும் செய்யவில்லை, மாறாக அவ்விலங்கால் அவர்கள் தாக்கப்பட்டனர். பிறகு கண் விழித்து பார்த்த பொழுது தான் தெரிந்தது அவர்களைத் தாக்கியது ஒரு நீர்மூழ்கிக்கப்பல் என்று ஆனால் அதே சமயம் அந்நீர்மூழ்கிக்கப்பலில் இருந்தவர்கள் கான்சீல், நெட் மற்றும் பியரி மூவரையும் சிறையில் அடைத்தனர்.

மறுநாள் அங்கு வந்த கப்பல் தலைவர் நெமோ இத்தனை நாள் நாங்கள் இது ஒரு அரிய விலங்கு என அனைவரையும் நம்ப வைத்துவிட்டோம். நீங்கள் வெளியே சென்றால் அது மாறிவிடும் எனவே உங்களை விடுவிக்க முடியாது. நீங்களும் கடைசிவரை எங்களுடனே இருக்க வேண்டும் என்றார்.

பின் ஆழ்கடலுக்குள் இவர்களின் பயணம் தொடர்ந்தது. கப்பலினுள் எல்லா இடங்களுக்கும் சென்றனர். அதில் நூலகம் மற்றும் அருங்காட்சியகம் இருந்தன. கப்பலில் உள்ளோர் மூச்சு விடுவதற்கான காற்று எவ்வாறு கிடைக்கிறது என்றும் கப்பல் எப்படி இயங்குகிறது என்றும் நெமோ விரிவாக அவர்களிடம் கூறினார்.

ஒரு நாள் கப்பல் ஒரு மணல் திட்டில் சிக்கியது. நெமோவிடம் அனுமதி பெற்று அவர்கள் படகில் சென்று அங்கு பக்கத்தில் இருந்த தீவிற்குச் சென்று காய்கறிகள், பழங்கள் முதலியவற்றை எடுத்து வந்தனர். அத்திவீல் மனிதர்களை தின்னும் மக்கள் இவர்களைத் துரத்தினர். பிறகு அங்கு இருந்து தப்பி பல நாட்களுக்குப் பிறகு இந்தியாவிற்கும் இலங்கைக்கும் அருகில் நாட்டிலஸ் சென்று கொண்டிருந்தது. அப்போது முத்துக்குளிக்கும் ஓர் இந்தியரை சுறாமீனிடமிருந்து காப்பாற்றினர்.

போரில் கடலில் மூழ்கிய கப்பலில் இருந்து தங்கம், வெள்ளி, வைரம் போன்றவற்றை எடுத்துக் கொண்டனர். கடலினுள் உள்ள எரிமலை, பூமியின் தென் துருவ பென்குவின், கடல்சிங்கம் போன்ற அரிய பறவைகள் விலங்குகளைக் கண்டனர். பின் ஒரு சரியான சூழலில் மூவரும் கப்பலுடன் இணைக்கப்பட்ட ஒரு படகில் ஏறி அதன் இணைப்பைத் துண்டித்துவிட்டு மூவரும் தப்பித்தனர். நாட்டிலஸ் கடலில் சூழலில் மாட்டிக்கொண்டது. அவர்கள் கடலில் தூக்கி வீசப்பட்டனர். பின் கண்விழித்துப் பார்த்த பொழுது நார்வே நாட்டில் ஒரு மீனவரின் குடிசையில் இருந்தனர். நெமோ மற்றும் நாட்டிலஸ் பற்றி யாருக்கும் எந்த தகவலும் தெரியவில்லை.

**கற்பவை கற்றபின்**

**2. நீர்மூழ்கிக்கப்பல் இயங்கும்முறை பற்றிய செய்திகளைத் திரட்டித் தொகுத்து எழுதுக.**

புஷ்வெல் என்பவர் நீர்மூழ்கிக்கப்பலைக் கண்டுபிடித்தார். நீர்மூழ்கிக்கப்பலில் இரண்டு என்ஜின்கள் உள்ளன. நீர்மட்டத்திற்கு மேலே ஒரு என்ஜின் உள்ளது. இது கப்பல் செல்லும் போது நீராவியால் இயக்கப்படும். இன்னொன்று கப்பல் நீரில் மூழ்கிச் செல்லும் போது மின்சாரத்தால் இயக்கப்படும். காற்று வாங்க மேடை, மேடையின் மீது சிறிய கோபுரம் மற்றும் கோபுர உச்சியில் பெரிஸ்கோப் இரட்டைக்கண்ணாடி பொருத்தப்பட்டிருக்கும். நீரினுள் இருக்கும்போது கண்ணாடியின் உதவியால் மாலுமி மேலே நடைபெறும் செயல்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். பெரிஸ்கோப் நீர்மூழ்கிக்கப்பலின் கண்கள் எனப்படும்.

நீரினுள் மூழ்கும் முன்பு அனைத்துக்கதவுகளும் மூடப்படும். பின்னர் நீர்த்தொட்டி திறக்கப்படும். நீர்த்தொட்டி நிறைந்ததும் கப்பலின் எடைக் கூடி கீழே செல்லும். கப்பல் மேலே வரும் போது காற்றுக்குழாய்கள் திறக்கப்படும். காற்றானது நீர்த்தொட்டிகளுக்குள் சென்று அங்கிருக்கும் நீரை வெளியேற்றும். இதனால் கப்பல் எடை குறைந்து மேலே வரும். கப்பலின் இருமுனைகளிலும் உள்ள எடை தராசுத்தட்டுகள் போல் சமமாக இருக்க வேண்டும். திடீரென ஏற்படும் ஆபத்தில் இருந்து தப்பிக்க காற்று உடைகள் இருக்கும். இவை மூச்சுவிடவும், கரைசேரவும் உறுதுணை செய்யும்.

## இலக்கிய வகைச்சொற்கள் ( கற்கண்டு )

### மதிப்பீடு

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 1. இயற்சொல் 2. திரிசொல் 3. சமஸ்கிருதம்

**ஆ) பொருத்துக.**

1. இயற்சொல் - சோறு 2. திரிசொல் - அழுவம்

3. திசைச்சொல் - பெற்றம் 4. வடசொல் - இரத்தம்

**இ) குறுவினா**

**1. மண், பொன் என்பவை எவ்வகைச்சொற்கள்?**

எளிதில் பொருள் விளங்கும் சொற்கள் இயற்சொற்கள். அவை பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும். மண், பொன் - பெயர் இயற்சொல்

**2. இயற்சொல்லின் வகைகள் யாவை?**

இயற்சொல் நான்கு வகைப்படும். அவை பெயர் இயற்சொல் (மண்). வினை இயற்சொல் (நடந்தான்). இடை இயற்சொல் (அவனை). உரி இயற்சொல் (மாநகர்).

**3. குங்குமம், கமலம் என்பன எவ்வகை வடச்சொற்கள் ?**

வடமொழியில் இருப்பது போன்றே தமிழில் எழுதுவது தற்சமம் என்பர்.
குங்குமம், கமலம் என்பன தற்சமம்.

**சிறுவினா**

**1. இலக்கியவகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

இலக்கியவகைச் சொற்கள் நான்கு வகைப்படும். இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகும்.

இயற்சொல் : எளிதில் பொருள் விளங்கும் வகையில் அமைந்த சொற்கள் இயற்சொற்கள் எனப்படும். எ.கா. கடல் அவை பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும்.

திரிசொல் : கற்றோருக்கு மட்டும் விளங்குவது மற்றும் இலக்கியங்களில் பயின்று வருபவை திரிசொற்கள் எனப்படும். அவை பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும். எ.கா. வளி

திசைச்சொல் : வடமொழியை தவிர பிறமொழிகளில் இருந்து வந்து தமிழில் இடம் பெறும் சொற்கள் திசைச்சொற்கள் எனப்படும். எ.கா. சன்னல்

வடசொல் : வடமொழியில் இருந்து வந்து தமிழில் இடம் பெறும் சொற்கள் வடசொற்கள் எனப்படும். இது தற்சமம், தற்பவம் எனப் பிரிக்கப்படும். எ.கா. கமலம் (தற்சமம்) விஷம் (தற்பவம்)

**2. திரிசொல்லின் வகைகள் குறித்து விளக்குக.**

திரிசொல் : கற்றோருக்கு மட்டும் விளங்குவது திரிசொல்.

ஒரு பொருள் குறித்த பல திரிசொல், பல பொருள் குறித்த ஒரு திரிசொல் என திரிசொல்லை இரு வகைப்படுத்தலாம்.

பெயர்த்திரிசொல் - வங்கம் வினைத்திரிசொல் - பயின்றாள்

இடைத்திரிசொல் - மான, அன்ன உரித்திரிசொல் - கூர், கழி

**3. பண்டிகை, கேணி என்பவை எவ்வகைச்சொற்கள்? விளக்குக.**

பண்டிகை, கேணி என்பன திசைச்சொற்கள் ஆகும்.

வடமொழி தவிர, பிறமொழிகளில் இருந்து வந்து தமிழில் இடம் பெறும் சொற்கள் திசைச்சொற்கள் எனப்படும். பண்டிகை என்பது தெலுங்கு மொழி சொல். கேணி என்பது அருவா நாட்டில் வழங்கும் சொல். இவை திசைச்சொற்களை தமிழில் கலந்துள்ளது.

### மொழியை ஆள்வோம்

**இ) விடைக்கேற்ற வினாவை அமைக்க**

1. இலக்கியங்கள் எப்போது தோன்றின?
2. சித்தார்த்தா உயர்கல்வி நிலையம் எங்கு உள்ளது?
3. வள்ளலாரின் இயற்பெயர் என்ன?

### அலகுத்தேர்வு

**அ) உரிய விடையைத் தேர்ந்தெடுக்க :** தோணி

**ஆ) நிரப்புக :** தொல்காப்பியம்

கட்டங்களை நிரப்புக

| வேர்ச்சொல் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| நட | நடந்தான் | நடக்கின்றான் | நடப்பான் |
| எழு | எழுந்தான் | எழுகின்றான் | எழுவான் |
| ஓடு | ஓடினர் | ஓடுகின்றனர் | ஓடுவர் |
| சிரி | சிரித்தாள் | சிரிக்கின்றாள் | சிரிப்பாள் |
| பிடி | பிடித்தான் | பிடிக்கின்றான் | பிடிப்பான் |
| இறங்கு | இறங்கினான் | இறங்குகின்றான் | இறங்குவான் |

**இ) பொருத்துக**

1. பருமல் - கப்பலின் உறுப்பு　　2. வங்கம் - கப்பல்
3. கடற்பயணி - மார்க்கோபோலோ　　4. கப்பல் செலுத்துபவர் - மீகாமன்

**ஈ) சொந்த வாக்கியங்களில் அமைக்க.**

1. நாவாய் : நாவாய் அளவில் பெரிய கடலோடும் வாகனமாகும்.
2. நீர்மட்டம் : மழை பொழிய ஆற்றின் நீர்மட்டம் உயரும்.
3. ஆணிகள் : இரும்பு ஆணிகள் துருப்பிடித்து விடும் என்பதால் மரத்தாலான ஆணிகளை கப்பலில் பயன்படுத்தினர்.
4. படகு : சிறிய நீர்நிலைகளைக் கடக்க படகு பயன்படுகிறது.
5. பலகை : கப்பல் கட்டும் பொழுது மரங்களையும் பலகைகளையும் இணைக்கும் பொழுது அவற்றுக்கு இடையே பஞ்சு (அ) தேங்காய்நார் வைத்தனர்.

**உ) திசைச்சொல்லைக் கண்டுபிடிக்க.** சன்னல்

**ஊ) காலப்பிழையைச் சரி செய்க.**

1. இராமன் நேற்று பந்து விளையாடினான்.　　2. கீதா இன்று வீணை வாசிப்பாள்.

**எ) பின்வரும் சொற்களுக்கு இரு பொருள் தருக.**

1. பலகை - மரத்தாலான பொருள், பல கைகள்
2. தாமரை - தாவுகின்ற மான், மலர் (மரை - மலர்)
3. அறிவில்லாதவன் - முட்டாள் (அறிவு இல்லாதவன்), அறிவில் ஆதவன் (சூரியன்)
4. கண்டு வந்தேன் - பார்த்து வந்தேன்,

**ஏ) "கை" என்ற எழுத்தில் முடியும் சொற்களை எழுதுக.**

பொய்கை, நங்கை, செய்கை, பலகை, பொதிகை, பண்டிகை, நம்பிக்கை, நாழிகை, நகை, பகை, சிகை, புகை, நாகை

**ஐ) கதிரவனைக் குறிக்கும் வேறு பெயர்களை எழுதுக.** சூரியன், பகலவன், பரிதி, ஆதவன், ஞாயிறு.

**ஒ) கலைச்சொல் அறிக :** கடல் தொழில்நுட்பம்

**ஓ) ஓர் எழுத்து ஒரு மொழியைக் கொண்டு நிறைவு செய்க :** மா, மாலை, மாநகரம்

இயல் - 5　　**இன்பத்தமிழ்க்கல்வி** (கவிதைப்பேழை)

**மதிப்பீடு :**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மயில்　2. வெற்பு　3. ஏடு + எடுத்தேன்　4. துயின்று + இருந்தார்　5. என்றுரைக்கும்

**ஆ) பொருத்துக.**

1. கழனி - வயல்　2. நிகர் - சமம்　3. பரிதி - கதிரவன்　4. முகில் - மேகம்

இ) குறுவினா.

1. பாரதிதாசனின் மனத்தைக் கவர முயன்ற இயற்கைப்பொருள்கள் யாவை?

வானம், நீரோடை, தாமரைமலர்கள், காடு, வயல், மேகம் முதலியன.

2. தமிழ்மொழிக்கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகள் எவையெனப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?

வாழ்வில் துன்பம் நீங்கும். நெஞ்சில் தூய்மை உண்டாகும். வீரம் வரும்.

ஈ) சிறுவினா.

1. இன்பத்தமிழ்க்கல்வி - பாடலின் மையக்கருத்தை சொந்த நடையில் எழுதுக.

- கவிதை எழுத ஏடு எடுத்த கவிஞரிடம், வானமும், நீரோடையும், தாமரை மலர்களும் எங்களைக் கவி ஓவியமாகத் தீட்டுக என்றன.
- கவிஞரின் கவிதையில் இடம் பெற காடும், வயல்களும், கருநிற மேகங்களும் முயன்றன. மயில் போன்ற பெண்கள் அன்பினை கவிதையாக எழுதுக என்றனர்.
- குளிர்ந்த தென்றல், மயில், அன்னம், கதிரவன், வேல் ஏந்திய வீரர்கள் என அனைவரும் தன்னை கவிதை படைக்க விரும்பினர்.
- ஆனால் கவிஞர் மனதில் அறியாமை இருளில் துன்பப்படும் தமிழ்நாட்டு மக்களின் துன்பம் கண்டு, இத்துன்பம் நீங்கிட, அனைவரும் இன்பத்தமிழ் கற்றவர் என்ற நிலை வர வேண்டும் என்றும் நெஞ்சில் தூய்மை உண்டாகி வீரம் வந்து சேரும் என்றும் கவிதை படைக்கிறார் கவிஞர் பாரதிதாசன்.

உ) சிந்தனை வினா.

1. தமிழ்மொழிக்கல்வி பயில்வதால் ஏற்படும் நன்மைகளாக நீங்கள் கருதுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

- தாய்மொழியான தமிழ்மொழிக்கல்வி தன்னம்பிக்கை வளர்க்கிறது.
- எளிமையாக உரையாட முடியும்
- சுய சிந்தனை வளரும்.
- கற்பதை பேசுவதுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியும்.
- ஆழமாகக் கல்வி கற்க முடியும்.

## கற்பவை கற்றபின்

1. இயற்கைக் காட்சி குறித்து நான்கு வரிகளில் கவிதை எழுதுக.

மறையும் ஆதவனும் உதிக்கும் வெண்மதியும்
ஒன்றாய் தெரியும் மாலை நேரம்
அழகான வான் மழையும் அலைவீசும் தென்றலும்
ஒன்றாய் வரும் மாரிக்காலம்
தம் மனதில் இன்பவெள்ளம் பாய்ச்சும்
ஆழம் நிறைந்த இயற்கை வண்ணம்...

## அழியாச்செல்வம் ( கவிதைப்பேழை ) மதிப்பீடு :

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கல்வி 2. கேடில்லாத 3. வாய் + தீயின் 4. கேடு + இல்லை 5. எவனொருவன்

ஆ) குறுவினா.

1. கல்விச்செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.

கல்வியை எவராலும் கவர இயலாது. பிறருக்குக் கற்றுக் கொடுப்பதால் மேலும் மேலும் வளரும். அரசராலும் பறிக்க முடியாது.

இ) சிறுவினா.

1. கல்விச்செல்வம் குறித்து நாலடியார் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

கல்வியைப் பொருள் போல வைத்திருப்பினும் அது பிறரால் கவரப்படாது. பிறருக்குக் கற்றுக்கொடுக்க மேலும் மேலும் வளரும்.

கோபம் கொண்ட மன்னர்களாலும் அதனைப் பறிக்க முடியாது. மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு நிலம், பொன், பொருள் போன்றவற்றை சேர்த்து வைப்பதற்கு பதில் கல்வியைச் செல்வமாக தேடிப் பாதுகாத்து வைக்க வேண்டும். ஏனெனில் பொருட்செல்வம் வெள்ளத்தாலோ வெந்தழலாலோ அழிய நேரும். கல்விச்செல்வம் எக்கேட்டாலும் அழிவுறாத செல்வமாகும். கல்வியே நிலையான செல்வமாகும்.

**ஈ) சிந்தனை வினா.**

**கல்விச்செல்வம் அழியாத செல்வம் எனப்படுவது ஏன்? சிந்தித்து எழுதுக.**

மனிதன் நிலம், வீடு, பொன், பொருள் என பல பொருட்செல்வங்களைச் சேர்க்கிறான். அச்செல்வங்களைக் காக்க கல்விச்செல்வமே பயன்படுகிறது. மேலும் பொருட்செல்வம் பிறரால் கவரப்படலாம். பிறரால் அழிக்கப்படலாம். ஆனால் கல்விச்செல்வம் யாராலும் கவரப்படாது. யாராலும் அழிக்கவும் முடியாது. கற்றவர்கள் எங்கு சென்றாலும் பிறரால் மதிக்கப்படுவர். கல்வி தொழிலுக்கு வழிகாட்டுகிறது. கல்வி கற்றவரிடம் ஒழுக்கம் உயர்ந்து காணப்படும். சமுதாய முன்னேற்றத்திற்கு கல்வி முக்கியம். எனவே என்றுமே அழியாத செல்வம் கல்வி மட்டுமேயாகும்.

## கற்பவை கற்றபின்

**1. கல்வியின் சிறப்பை விளக்கும் பிற பாடல்களைத் திரட்டி எழுதுக.**

- கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
  நிற்க அதற்குத் தக - திருக்குறள்
- கற்றோர்க்குக் கல்வி நலனே கலன் அல்லால்
  மற்றோர் அணிகலம் வேண்டாவாம்
  - நீதிநெறி விளக்கம்
- நெஞ்சத்து நல்லம் யாம் என்னும்
  கல்வியழகே அழகு - நாலடியார்

## வாழ்விக்கும் கல்வி (உரைநடை உலகம்)

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கல்வி 2. விளக்கில்லாத 3. ஔவையார் 4. உயர்வு + அடைவோம் 5. இவையெல்லாம்

**ஆ) சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

1. செல்வம் : கல்வியே அழியாத செல்வமாகும்.
2. இளமைப்பருவம் : கல்வி கற்க இளமைப்பருவம் சிறந்தது.
3. தேர்ந்தெடுத்து : சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்க வேண்டும்.

**இ) குறுவினா.**

**1. மனிதப்பிறவிக்கும், பிற உயிரினங்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடு யாது?**

- மனிதப்பிறவிக்கும் பிற உயிரினங்களுக்கும் இடையே உள்ள மிகப்பெரிய வேறுபாடு மனிதனிடம் உள்ள தனித்தன்மையே ஆகும்.
- ஏனெனில் எதிர்காலத்தைப் பற்றி அறிய இயலாத பிறவி மனிதப்பிறவியாகும். மற்ற உயிரினங்களின் எதிர்காலம் இது தான் என அறிய முடியும். மனிதனின் நிலையோ பல மாற்றங்கள் நிறைந்தது.

**2. கல்வி அறிவு இல்லாதவர்கள் பற்றி வள்ளுவர் கூறியது யாது?**

- கல்வி அறிவு இல்லாதவர்களை விலங்கோடு ஒப்பிடுகிறார் வள்ளுவர்.
- விலங்குகள் நல்ல செயல்களைத் தாமாக செய்யாது அதுபோல கல்வியறிவு இல்லாதவர்கள் நல்லனவற்றைச் செய்வதில்லை என்கிறார் வள்ளுவர்.

**3. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?**

படிக்க வேண்டிய நூல்களை ஆழ்ந்து, ஆராய்ந்து படிக்க வேண்டும் என்பதே வள்ளுவர் கூறும் கருத்தாகும்.

ஈ) சிறுவினா.

**1. கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக.**

- உலகில் உள்ள பிற செல்வங்கள் அனைத்தும் அழியும்.
- கல்விச்செல்வம் என்றும் அழியாது.
- அள்ள அள்ள குறையாதது. அழிக்கவே முடியாதது. அழியாப் புகழைத் தருவது கல்விச்செல்வமாகும்.
- கல்வி கற்கும் போது கசப்பாகத் தெரிந்தாலும் கற்றபின் கரும்பாய் இனிக்கும். வாழ்வை முன்னேற்றும்.
- இத்தகைய கல்விச்செல்வத்தை போற்றிக் காத்திட வேண்டும்.

**2. இருண்ட வீட்டிற்கு கல்வி விளக்காகும் - விளக்குக.**

- விளக்கானது தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள இடத்தையும் ஒளி வீசச் செய்கிறது.
- கல்வி ஓர் ஒளி விளக்கு. அந்த விளக்கு தான் இருக்கும் இடத்தின் இருட்டை ஒழித்து ஒளியைத் தருகிறது.
- கல்வியும் கற்றவரின் வாழ்வில் வெளிச்சத்தைக் கொண்டு வருகிறது.
- கல்வியில்லாத நாடு விளக்கு இல்லாத வீடு போன்றது. விளக்கு இல்லாத வீட்டில் யாரும் குடியிருக்க விரும்புவதுமில்லை. கல்வி இல்லாத குடும்பத்தை யாரும் மதிப்பதில்லை.
- நல்ல மதிப்பையும் நல்வழியையும் தரும் கல்வியைக் கற்று வாழ்வில் உயர்வு பெறுவோம்.

உ) சிந்தனை வினா

**1. கல்வி மலரும் சோலை பள்ளியே - எனச் சிந்தித்து விடையளிக்க.**

- இளமையில் கல்வி இனிய எதிர்காலத்தை நல்கும்.
- கல்வியைப் பிள்ளைச்செல்வங்களிடம் சரியாகக் கொண்டு சேர்க்கும் இடம் பள்ளிக்கூடமாகும்.
- பள்ளிக்கூடங்கள் கல்வியையும், ஒழுக்கத்தையும் ஒரே இடத்தில் வழங்குகிறது.
- பல கல்வியாளர்களையும், பல சிறந்த நூல்களையும் பள்ளிக்கூடங்கள் கற்பிக்கின்றன.

## கற்பவை கற்றபின்

**1. கல்வி தொடர்பான பாடல்வரிகளைத் தொகுத்து எழுதுக.**

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேகம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு

- (மூதுரை ; ஔவையார்)

பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்
மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா
விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு.

- (சிறுபஞ்சமூலம் ; காரியாசான்)

## பள்ளி மறுதிறப்பு (விரிவானம்)
## மதிப்பீடு

அ) நெடுவினா :

**மலர்விழியும், தமிழரசியும் பேசிய தலைப்பின் கீழ்வரும் கருத்துகளைப் பதிவு செய்க.**

முன்னுரை :

உணவும், உடையும், உறையுளும் கல்வியும் தந்து ஒரு குழந்தையை வளர்ப்பது பெற்றோர் மற்றும் ஆசிரியரின் கடமையாகும். கற்பதும் கற்றவழி நிற்பதும் மாணவர் கடமையாகும்.

பள்ளி மறுதிறப்பு :

கோடை விடுமுறை முடிந்து பள்ளிக்குச் செல்ல இரண்டு நாட்கள் மட்டுமே இருந்தது. மலர்விழிக்கு தான் வானொலியில் கேட்ட பட்டிமன்றம் குறித்து தன் தோழி தமிழரசியிடம் கருத்துகளைப் பகிர விரும்பினாள், அக் கருத்துகளைக் காண்போம்.

கல்விக் குறித்த கருத்துகளும், அதை வெளிப்படுத்தும் முறைகளும் :

- "கேடில் விழுச்செல்வம் கல்வி" என்று கூறிய வள்ளுவர் "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்ற கருத்தையும் கூறியிருக்கிறார்.
- அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற பணம் தேவையென்றாலும் அப்பணத்தை சரியாய் பயன்படுத்தும் அறிவு கல்வி தருவதேயாகும்.
- பணம் பத்தும் செய்யும்; ஆனால் அது கொடுக்க கொடுக்க குறையும். பிறரால் எடுக்கவும் மறைக்கவும் முடியும். ஆனால் கல்வி அழியாத செல்வம். கொடுத்தால் வளரும். பிறரால் கவர முடியாத ஒன்று கல்வி ஆகும்.
- கல்லாதவன் அறியாமையால் தவறு செய்கின்றான். கற்றறிந்தவன் வறுமையிலும் செம்மையாக வாழ்கிறான். செல்வமோ செருக்கினால் தவறு செய்கிறான்.
- வசதியான வாழ்வுக்கு பொருட்செல்வம் தேவைப்படலாம். ஆனால் அமைதியான வாழ்வுக்கும் பண்பான வாழ்வுக்கும் கல்வி அவசியம்.
- கல்வியைக் கற்பதைப் போல கற்றதைக் கூறவும் கலை மிக அவசியம். மலர்களில் நறுமண வேறுபாட்டையும், நிற வேறுபாட்டையும் உணர்ந்து அவற்றின் இடையிடையே அமைத்து அழகான மாலைகள் தொடுப்பது போல பேச்சின் இடையே சுவைமிக்க சொற்களைக் கலந்து பேச வேண்டும்.
- கருத்துகளை எடுத்துக்கூறும் போது சொல்லாட்சிகள் பலவித நடைகள், சிறுசிறுகதைகள் முதலியன அமைந்ததே சிறந்த பேச்சாகும்.

முடிவுரை :

சொல்லுகின்ற கருத்தைச் சுவைப்பட, நிரல்பட, திறம்பட, தெளிவாய்ச் சொல்ல வேண்டும். அப்படி திறம்பட தெளிவாகப் பேச கல்வி அறிவு அவசியம்.

"கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்".

## **ஓரெழுத்து ஒரு மொழி, பகுபதம், பகாப்பதம்** (கற்கண்டு)
## **மதிப்பீடு :**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 1. 42 2. வினைப்பகுபதம் 3. ஆறு 4. இடைநிலை

**ஆ) பொருத்துக.**

1. பெயர்ப்பகுபதம் - பெரியார்  2. வினைப்பகுபதம் - வாழ்ந்தான்
3. இடைப்பகுபதம் - மன்  4. உரிப்பகுபதம் - நனி

**இ) சரியான பகுபத உறுப்பை எழுதுக.**

1. போவாள் - போ - பகுதி வ் - எதிர்கால இடைநிலை ஆள் - படர்க்கை பெண்பால் வினைமுற்று விகுதி
2. நடக்கின்றான் - நட - பகுதி க் - சந்தி கின்று - நிகழ்கால இடைநிலை ஆன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி

**ஈ) பின்வரும் சொற்களைப் பிரித்துப் பகுபத உறுப்புகளை எழுதுக.**

1. பார்த்தான் - பார் + த் + த் + ஆன்
பார் - பகுதி த் - சந்தி த் - இறந்தகால இடைநிலை ஆன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி
2. பாடுவார் - பாடு + வ் + ஆர்
பாடு - பகுதி வ் - எதிர்கால இடைநிலை ஆர் - படர்க்கை பலர்பால் வினைமுற்று விகுதி

**உ) குறுவினா.**

1. ஓரெழுத்து ஒரு மொழி என்றால் என்ன?

ஓரெழுத்து தனித்து நின்று பொருள் தரும் சொல்லாக அமைவது ஓரெழுத்து ஒரு மொழி ஆகும்.

எ.கா. நீ, தீ, தை, போ

2. பதத்தின் இரு வகைகள் யாவை?

பதம் பகுபதம், பகாப்பதம் என இரண்டு வகைப்படும்.

3. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும். அவை பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் ஆகும்.

**ஊ) சிறுவினா.**

1. விகுதி எவற்றைக் காட்டும்?

சொல்லின் இறுதியில் நிற்கும் பகுபத உறுப்பு விகுதியாகும். இது திணை, பால், எண், இடம், முற்று, எச்சம் போன்றவற்றைக் காட்டும்.

எ.கா. படித்தான் - ஆண் - விகுதி

2. விகாரம் என்பது யாது? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

பகுதி, விகுதி, சந்தி, இடைநிலை இவற்றில் ஏற்படும் மாற்றமே விகாரம் எனப்படும்.

எ.கா. வந்தாள் - வா - பகுதி ("வா" - வ எனக் குறுகியது விகாரம்)

3. பெயர்ப்பகுபதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பெயர்ப்பகுபதம் ஆறு வகைப்படும். அவை பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் ஆகியவை ஆகும்.

## கற்பவை கற்றபின்

**பாடப்பகுதியில் இடம் பெற்ற சொற்களில் பகுபதம், பகாப்பதம் முதலியவற்றைக் கண்டறிந்து தனித்தனியே தொகுக்க.**

பகுபதம் : பொன்னன், சித்திரையான், மதுரையான், கண்ணன், இனியன், தச்சன், வந்தான், நடந்தான்.

பகாப்பதம் : நிலம், காற்று, மன், உறு, நட, நெருப்பு, நீர்

## மொழியை ஆள்வோம்

**அ) இரு சொற்கள் ஒரே பொருளைத் தரும் சொல் விளையாட்டு**

செல் - போ, படி - வாசி, தா - கொடு, உண் - தின், அணி - உடுத்து, வழங்குதல் - கொடை, செல்வம் - பணம், சோம்பல் - மந்தம்

**ஆ) கீழ்க்காணும் சொற்களை அறுவகைப் பெயர்களாக வகைப்படுத்துக.**

| பொருள் | இடம் | காலம் | சினை | குணம் | தொழில் |
|---|---|---|---|---|---|
| அன்னம் | பள்ளி | ஐந்துமணி | முகம் | செம்மை | விளையாட்டு |
| வடை | நல்லூர் | புதன் | தோகை | பெரியது | வருதல் |
| பாரதிதாசன் | சோலை | காலை | இறக்கை | - | கேட்டல் |

**இ) சரியான சொல்லைக் கொண்டு நிரப்புக :** 1. உன் 2. நாம் 3. அது 4. நீ 5. அவர்கள்

**ஈ) பின்வரும் தொடர்களில் மூவிடப்பெயர்களை அடிக்கோடிடுக.**

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| எங்கள் | உங்கள் | ஆசிரியர் |
| எனக்கு | நீர் | அது |
| நான் | உங்களோடு | - |

**ஊ) கடிதம் எழுதுக. : உங்கள் பகுதியில் பூங்கா ஒன்று அமைத்துத் தர வேண்டி மாவட்ட ஆட்சியாளருக்கு ஒரு கடிதம் எழுதுக.**

அனுப்புநர் :

ஊர்ப் பொதுமக்கள்,
வள்ளுவர் காலனி,
மதுரை மாவட்டம்.

பெறுநர் :

உயர்திரு. மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மதுரை மாவட்டம்

மதிப்பிற்குரிய ஐயா/ அம்மா,

பொருள்: பூங்கா அமைத்துத் தர வேண்டுதல் தொடர்பாக

வணக்கம். எங்கள் குடியிருப்பு பகுதி வள்ளுவர் காலனி. இங்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. இங்கு குழந்தைகள் விளையாடுவதற்கும் வயதானவர்கள் நடைபெயற்சி மேற்கொள்ளவும் எங்கள் பகுதியில் பூங்கா ஒன்று அமைத்து கொடுப்பது எங்களை மிகவும் மகிழ்ச்சியாக்கும். எங்கள் பகுதி மக்கள் பூங்காவிற்காக வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது. விடுமுறை நாட்களையும், ஓய்வு நேரங்களையும் இயற்கையுடன் கழிக்க பூங்கா அமைத்து தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
ஊர்ப்பொதுமக்கள்

இடம் : வள்ளுவர் காலனி
நாள் : 20.8.2020

உறைமேல் முகவரி
பெறுநர்
உயர்திரு. மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

**கீழ்க்கண்ட பாடலை வாசித்து விடை எழுதுக.**

1. வானொலி 2. தொலைவில் செய்தி அனுப்புதல் 3. இத்தாலி
4. வானொலி, தந்திக்கருவி கண்டுபிடிப்பிற்காக நோபல்பரிசு பெற்றார்.
5. வாக்கியத்தில் அமை

இரவு பகல் : மார்க்கோனி இரவுபகல் அயராது உழைத்தார்.
காற்று : பஞ்சபூதங்களில் ஒன்று காற்று ஆகும்.
உழைப்பு : கடின உழைப்பு வெற்றியைத் தரும்.
அறிவியல் : அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதர்களுக்கு மிகவும் உதவுகிறது.

இயல் - 6 **ஒரு வேண்டுகோள்** ( கவிதைப்பேழை )

**மதிப்பீடு :**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வனப்பு 2. நெடி 3. மழலையின் 4. வனப்பு + இல்லை 5. வார்ப்பெனில்

**ஆ) நயம் அறிக.**

**இயைபுச்சொற்கள் :**

| | | |
|---|---|---|
| சிகரங்களா | பள்ளத்தாக்குகளா | வனப்பில்லை |
| அலைகளா | தோட்டங்களா | உயிர்ப்பில்லை |

இ) குறுவினா

1. தாய்மையின் ஓவியத்தில் நிறைந்திருக்க வேண்டியவை யாவை?

அன்பும், பாசமும் தாய்மையின் ஓவியத்தில் நிறைந்திருக்க வேண்டும்.

2. ஒரு கலை எப்பொழுது உயிர்ப்புடையதாக அமையும்?

மானுட அடையாளமான மனிதப்பண்புகள் ஒரு கலையை உயிர்ப்புடையதாக மாற்றும்.

ஈ) சிறுவினா

**சிற்பங்களும், ஓவியங்களும் எவ்வாறு அமைய வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?**

சிற்பங்கள் :

சிற்பி செதுக்கும், பாறை உடைப்பவரின் சிலையில் வியர்வை நாற்றமும், வயலை உழுகின்ற உழவனின் உருவத்தில் ஈரமண் வாசமும் வீச வேண்டும்.

ஓவியங்கள் :

ஓவியன் வரையும் தாயின் உருவத்தில் அன்பும் பண்பும் மேலோங்கிட வேண்டும். குழந்தையின் உருவத்தில் பால்மணம் வீச வேண்டும். சிற்பங்களும், ஓவியங்களும் இவ்வாறு அமைவதே சிறப்பு என்று கவிஞர் கூறுகிறார்.

உ) சிந்தனை வினா

**நீங்கள் ஒரு கலைஞராக இருந்தால் எத்தகைய படைப்புகளை உருவாக்குவீர்கள் ?**

நான் ஒரு கலைஞராக இருந்தால் பச்சைப்பசேல் வயல்வெளிகள், பாடும்பறவைகள், ஓடித்திரியும் காட்டு விலங்குகள், கொட்டும் மழைநீர், குழந்தையின் சிரிப்பு, முதுமையின் அழகு என அனைத்தையும் கவிநடையிலும், ஓவியவண்ணத்திலும் உருவாக்குவேன்.

## கற்பவை கற்றபின்

**உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒரு கலை பற்றிய தகவல்களைத் தொகுக்க.**

பொம்மலாட்டம் : தமிழர்களின் மிகப் பழமையான மரபுவழிக் கலைகளில் ஒன்று பொம்மலாட்டம். மரத்தில் செய்யப்பட்ட பொம்மைகளில் நூலைக்கட்டி திரைக்குப் பின்னால் இருந்து இயக்கியபடி கதை சொல்லும் ஒரு கலை நிகழ்வு. இதன் வேறு பெயர்கள் மரப்பாவைக் கூத்து, பாவைக்கூத்து ஆகும். தோல் பொம்மலாட்டம், மரப்பொம்மலாட்டம் என இரண்டு வகை உண்டு. இது மரபுவழிக் கலையாகத் திகழ்கிறது.

## கீரைப்பாத்தியும், குதிரையும் (கவிதைப்பேழை)

### மதிப்பீடு :

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1.குதிரை 2. திரும்புகையில் 3. வண்மை + கீரை 4. கட்டியடித்தல்

ஆ) சிறுவினா.

**கீரைப்பாத்தியும், குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?**

| கீரைப்பாத்தி | குதிரை |
|---|---|
| • மண் கட்டிகள் தூளாக்கப்படும்.<br>• மண்ணை வெட்டித் தடுத்துப் பாத்தியாக்குவர்.<br>• வாய்க்காலில் மாறி மாறி நீர் பாய்ச்சுவர்.<br>• நீர் கடைமடையின் இறுதிவரை பாய்ந்து மடை மாற்றி விடத்திரும்பும். | • வண்டியில் கட்டி அடித்து ஓட்டப்படும்.<br>• எதிரிகளை மறித்துத் தாக்கும்.<br>• கால் மாறிமாறிப் பாய்ந்து செல்லும்.<br>• செல்ல வேண்டிய இடங்களுக்குச் சென்று மீண்டும் திரும்பி வரும். |

இ) சிந்தனை வினா

**நீங்கள் எவற்றைக் குதிரையோடு ஒப்பிடுவீர்கள் ?**

நான் காளை, மாடு, ஆறு ஆகியவற்றை குதிரையோடு ஒப்பிடுகிறேன்.

ஆறும் குதிரையும் : ஆறு - வேகமாக ஓடும்; பாய்ந்து வயலை வளப்படுத்தும்.

குதிரை - வேகமாக ஓடும்; பாய்ந்து பகைவரைத் தாக்கும்.

காளையும் குதிரையும் :

காளை - வேகமாக ஓடும்; வண்டி இழுக்கும் உரிமையாளரிடம் அன்போடு பழகும்.

குதிரை - வேகமாக ஓடும்; வண்டி இழுக்கும் உரிமையாளரிடம் அன்போடு நிற்கும்.

## கற்பவை கற்றபின்

**இரு பொருள் தரும் சொற்கள் சிலவற்றை எழுதி அவற்றின் இரு பொருள்களையும் எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| திரை | - அலை, திரைச்சீலை | திங்கள் | - மாதம், சந்திரன் |
| ஞாயிறு | - கிழமை, சூரியன் | தை | - தைத்தல், மாதம் |
| பணி | - வேலை, பணிதல் | மதி | - நிலவு, அறிவு |
| ஆறு | - எண், நதி | ஆழி | - மோதிரம், கடல் |
| ஈ | - பூச்சிவகை, கொடு | அரி | - திருமால், சிங்கம் |

## பேசும் ஓவியங்கள் (உரைநடை உலகம்)

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மண் துகள் 2. கேலிச்சித்திரம் 3. கோடு + ஓவியம் 4. செப்பு + ஏடு 5. எழுத்தாணி

**ஆ) நிரப்புக :** 1. பாரதியார் 2. துணி ஓவியம் 3. செப்பேடுகளின்

**இ) குறுவினா.**

**1. ஓவியங்களின் வகைகள் யாவை?**

ஓவியங்களின் வகைகள் : குகை ஓவியம், சுவர் ஓவியம், துணி ஓவியம், ஓலைச்சுவடி ஓவியம், செப்பேட்டு ஓவியம், தந்த ஓவியம், கண்ணாடி ஓவியம், தாள் ஓவியம், நவீன ஓவியம், கருத்துப்பட ஓவியம்.

**2. குகை ஓவியங்களில் இருந்து நாம் அறியும் செய்திகள் யாவை?**

பழங்கால மனிதர்கள் செய்திகளைப் பிறருக்குத் தெரிவிக்கவே குகை ஓவியங்களை வரையத் தொடங்கினர்.

**3. தாள் ஓவியங்களை எவற்றைக் கொண்டு வரைவர் ?**

கரிக்கோல், நீர்வண்ணம், எண்ணெய் வண்ணம் ஆகியவற்றைக் கொண்டு வரைவர்.

**4. சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்களைக் கூறுக.**

அரண்மனைகள், மண்டபங்கள், கோயில்கள் முதலியவற்றின் சுவர்களிலும், மேற்கூரைகளிலும் சுவர்ஓவியங்கள் காணப்படும்.

**5. செப்பேட்டு ஓவியங்களில் காணப்படும் காட்சிகள் யாவை?**

நீர்நிலைகள், செடிகொடிகள், பறவைகள், விலங்குகள், குறியீடுகள்

**ஈ) சிறுவினா**

**1. கேலிச்சித்திரம் என்றால் என்ன?**

- அரசியல் கருத்துக்களை படங்களைக் கொண்டு விளக்குவது கருத்துப்பட ஓவியமாகும்.
- கருத்துப்பட ஓவியங்களின் மற்றொரு வடிவம் கேலிச்சித்திரம் எனப்படும்.
- தமிழ்நாட்டில் முதன்முதலாக கருத்துப்படங்களை வெளியிட்டவர் பாரதியார். இந்தியா என்னும் இதழில் வெளியிட்டார்.
- மனித உருவங்களை விந்தையான தோற்றங்களில் நகைச்சுவை உணர்வுடன் கருத்துகளை வெளிப்படுத்துவது கேலிச்சித்திரமாகும்.

**2. ஓலைச்சுவடி ஓவியங்கள் குறித்து நீங்கள் அறிந்து கொணடவற்றை எழுதுக.**

- பனைஓலையில் செய்யப்பட்ட ஓலைச்சுவடியில் எழுத்தாணிகளைக் கொண்டு கோட்டோவியமாக வரைவது ஓலைச்சுவடி ஓவியம்.
- இதிகாசம் மற்றும் புராணக்காட்சிகளாகவே இத்தகைய ஓவியங்கள் இடம் பெற்றிருக்கும்.
- தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில் ஓலைச்சுவடி ஓவியங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. தற்காலத்தில் ஓலைச்சுவடி ஓவியங்களைக் காண்பது அரிது.

உ) **சிந்தனை வினா.**

**தந்த ஓவியங்கள் கேரளாவில் அதிகம் காணப்படுவதேன்?**

- இயற்கை அன்னையின் உறைவிடம் கேரளாவாகும்.
- மலைகள், நீர்நிலைகள் என இயற்கை அமைப்பு பெருகியுள்ள மாநிலம்.
- யானைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. அதனால் தந்தத்தால் ஆன ஓவியங்கள் அதிகம் காணப்படுகின்றன.

## **தமிழர் ஒளிர் இடங்கள்** (விரிவானம்)

## **மதிப்பீடு :**

அ) **சிந்தனை வினா**

**நீங்கள் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தால் சுற்றுலாக்கையேடு என்னும் பகுதியில் உள்ள இடங்களைப் பார்வையிட வருபவர்களுக்கு எவ்வாறு விளக்கிக் கூறுவீர்கள்?**

நான் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தால் பார்வையிட வருபவர்களுக்கு பின்வருமாறு சுற்றிக் காட்டி விளக்கிக் கூறுவேன்.

தஞ்சை சரசுவதி மகால் நூலகம்:

இது தான் தஞ்சை சரசுவதி மகால் நூலகம். இது இந்தியாவில் உள்ள தொன்மையான நூலகங்களில் ஒன்று. கி.பி. 1122 முதல் இயங்கி வரும் இந்நூலகத்தில் தமிழ், தெலுங்கு உள்ளிட்ட பல்வேறு மொழிகளின் ஓலைச்சுவடிகளும் கையெழுத்துப்படிகளும் உள்ளன. இது தவிர இங்கு தலைசிறந்த ஓவியங்களும் தொன்மையான இசைக்கருவிகளும் இடம் பெற்றுள்ளன. அடுத்தது நாம் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தைக் காண்போம்.

தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம்:

வானத்திலிருந்து பார்த்தால் தமிழ்நாடு என்ற எழுத்துகள் தெரியும் வகையில் இதன் கட்டட அமைப்புள்ளது. இங்கு கலை, சுவடி, வளர்தமிழ், மொழி, அறிவியல் என ஐந்து புலங்களும் இருபத்து ஐந்து துறைகளும் உள்ளன. இந்திய ஆட்சிப்பணி பயிற்சியாளர்களுக்குத் தமிழ்மொழிப் பயிற்சி அளிக்கிறது. அடுத்து சென்னை உ.வே.சா.நூலகம், கீழ்த்திசை நூலகம், கன்னிமாரா நூலகம் ஆகியவற்றைக் குறித்துக் காண்போம்.

உ.வே.சா. நூலகம், சென்னை:

1942 - இல் தொடங்கப்பட்டது. இங்கு தமிழ், தெலுங்கு, வடமொழி உள்ளிட்ட பல்வேறு மொழி நூல்கள் உள்ளன.

கீழ்த்திசை நூலகம், சென்னை:

கி.பி. 1869 இல் தொடங்கப்பட்டது. இங்கு தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் ஓலைச்சுவடிகள் உள்ளன. தற்போது அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் ஏழாம் தளத்தில் இயங்கி வருகிறது.

கன்னிமாரா நூலகம், சென்னை:

கி.பி. 1896 இல் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டின் மைய நூலகம். இந்திய களஞ்சிய நூலகங்களில் ஒன்று. இந்தியாவில் வெளியிடப்படும் புத்தகங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள் ஆகியவற்றின் ஒரு பிரதி இங்கு பாதுகாக்கப்படுகிறது. அடுத்து திருவள்ளுவர் சிலையைக் காணலாம்.

திருவள்ளுவர் சிலை, கன்னியாகுமரி:

இது தான் திருவள்ளுவரின் சிலை. சிலையின் உயரம் 133 அடி. இது திருக்குறளின் மொத்த அதிகாரங்களைக் குறிக்கிறது. தமிழின் பெருமைமிகு அடையாளம் இச்சிலை.

உலகத்தமிழ்ச்சங்கம், மதுரை:

இது தான் உலகத்தமிழ்ச்சங்கம். இதனுள் பன்னாட்டு அளவிலான கருத்தரங்கக்கூடங்கள், ஆய்வரங்கங்கள், நூலகம், பார்வையாளர் அரங்கம் ஆகியன உள்ளன. வெளிப்புறச் சுற்றுச்சுவரில் 1330 குறட்பாக்கள் இடம் பெற்றுள்ளன.

சிற்பக்கலைக்கூடம், பூம்புகார்:

இது தான் பூம்புகார் சிற்பக்கலைக்கூடம். இக்கூடம் ஏழுநிலை மாடங்களைக் கொண்டது. கண்ணகியின் வரலாற்றை விளக்கும் நாற்பத்தொன்பது சிற்பத் தொகுதிகள் இதில் இடம் பெற்றுள்ளன. மாதவிக்கு ஒரு நெடியசிலை இங்கு நிறுவப்பட்டுள்ளது. இவ்வாறு பார்வையிட வருபவர்களுக்கு சுற்றுலாத்தளங்களை விளக்கிக் கூறுவேன்.

**கருத்துணர்திறன்**

**வினா - விடை**

**கீழ்க்கண்ட பாடலைப் படித்து விடை எழுதுக.**

1. மலையில் ஏறி நடந்து உச்சியைப் பார்க்க ஆசை.
2. கடலில் மிதக்கும் கப்பலில் பயணம் செய்ய ஆசை.
3. நன்கு படித்து பட்டங்கள் பெற்று பண்புள்ள குடிமகனாய் நாட்டுப்பணி செய்ய ஆசை.

## தொழிற்பெயர் (கற்கண்டு)

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 1. படித்தல் 2. ஊறு

**ஆ) பொருத்துக.**

1. ஓட்டம் - விகுதி பெற்ற தொழிற்பெயர்
2. பிடி - முதனிலைத் தொழிற்பெயர்
3. சூடு - முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

**இ) சிறுவினா**

**1. வளர்தல், பேசுதல் - இவை எவ்வகைப்பெயர்கள் விளக்கம் தருக.**

வளர்தல், பேசுதல் - இவை விகுதி பெற்ற தொழிற்பெயர்கள்

வளர், பேசு - வினைப்பகுதிகள் தல் - தொழில்பெயர் விகுதி

இவ்வாறு வினைப்பகுதியுடன் தொழிற்பெயர் விகுதி சேர்ந்து வருவதால் விகுதி பெற்ற தொழிற்பெயர் ஆகும்.

**2. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.**

முதனிலை திரிந்த தொழிற்பெயர் :

முதன்மையான பகுதி திரிவதால் உருவாகும் தொழிற்பெயர் முதனிலை திரிந்த தொழிற்பெயர் எனப்படும். சான்று : பேறு பெற்றேன். பெறு - பேறு எனத் திரிந்தது.

சூடு குறையவில்லை. சுடு - சூடு எனத் திரிந்தது.

## கற்பவை கற்றபின்

**பேசும் ஓவியங்கள் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.**

சொல்லுதல், ஆடுதல், செய்தல்

## மொழியை ஆள்வோம்

**பின்வரும் வாக்கியங்களில் இடைச்சொற்களை உதாரணத்தில் உள்ளபடி எடுத்தெழுதுக.**

1. ஐ - வேற்றுமை 2. போன்ற - உவமஉருபு 3. ஏ - இடைச்சொல் 4. உம் - எண்ணும்மை
5. ஆ - வினாச்சொல்

## திருக்குறள் (வாழ்வியல்)

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. செய்யத் தகுந்த செயல்களைச் செய்யாமல் இருப்பதால் 2. சோம்பல் 3. எழுத்து + என்ப
4. கரைந்து + உண்ணும் 5. கற்றனைத்தூறும்

**ஆ) பொருத்துக.**

1. கற்கும் முறை - பிழையில்லாமல் கற்றல்
2. உயிர்க்குக் கண்கள் - எண்ணும் எழுத்தும்
3. விழுச்செல்வம் - கல்வி
4. எண்ணித்துணிக - செயல்
5. கரவா கரைந்துண்ணும் - காகம்

**இ) குறுவினா.**

1. **நன்மை செய்வதிலும் தீமை உண்டாகும் எப்போது?**

ஒருவரின் குணம் அறிந்து நன்மை செய்ய வேண்டும். இல்லையென்றால் நன்மை செய்வதிலும் தீமை உண்டாகும்.

2. **தீமை உண்டாக்கும் இரண்டு செயல்களை எழுதுக.**

செய்யத்தகாத செயல்களைச் செய்தல், செய்யத்தக்க செயல்களைச் செய்யாமல் விடுதல்

3. **துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் யார்?**

துன்பம் வரும்போது அதனைக் கண்டு வருந்திக் கலங்காதவர். அந்தத் துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் ஆவர்.

**பாடப்பகுதியிலிருந்து படங்களைப் பொருத்தமான திருக்குறளை எழுதுக.**

1. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.

2. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

3. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

4. காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள.

**பின்வரும் கவிதையைப் படித்து தகுந்தபடி விடையளி**

**கவிதையில் கலந்துள்ள அடுக்குத்தொடர்களை எழுதுக.**

1. கூட்டம் கூட்டமாக 2. குவியல் குவியலாக 3. குலை குலையாய் 4. வரிசை வரிசையாக

**எழுதுதல் திறன்**

1. புத்தகக்கண்காட்சி பற்றியது. 2. மதுரை தமுக்கம் மைதானம் 3. பத்து நாட்கள்
4. 10 விழுக்காடு கழிவு தரப்படுகிறது.
5. தென்னிந்திய நூல் விற்பனையாளர் சங்கம் நடத்தும் புத்தகக்கண்காட்சி.

இயல் - 7

## விருந்தோம்பல் ( கவிதைப்பேழை )

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 1. மாரி 2. நீர் + உலையில் 3. மாரியொன்று

**ஆ) குறுவினா.**

1. **பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.**

பாரி மகளிரின் பெயர்கள் : அங்கவை, சங்கவை ஆகும்.

2. **பொருள் ஏதும் இல்லாத வீடுகளே இல்லை - எவ்வாறு?**

பாரி மகளிர் உலை நீரில் பொன்னிட்டு தந்ததால் பொருள் ஏதும் இல்லாத வீடுகளே இல்லை என்பது புலனாகிறது.

**இ) சிந்தனை வினா.**

1. **தமிழர்களின் பிற பண்பாட்டுக்கூறுகளை எழுதுக.**

- பெரியோரை மதித்தல்
- நன்றியுணர்வு
- விருந்தோம்பல்
- ஈகை
- நாட்டுப்பற்று
- மொழிப்பற்று
- சிறந்த கல்வியைப் பெறுதல்
- ஒழுக்கம்.

### கற்பவை கற்றபின்

1. **வள்ளல்கள் எழுவரின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**

1. அதியமான் 2. ஆய் 3. ஓரி 4.காரி 5.நள்ளி 6. பாரி 7.பேகன்

**2. விருந்தோம்பல் கதை :**

ஒரு அழகிய கிராமம். அங்கு கண்ணன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு விவசாயி. தன் விவசாயம் மூலம் கிடைக்கும் வருமானத்தில் நான்கில் ஒரு பங்கை புதிதாக அந்த ஊருக்கு வரும் வழிப்போக்கர்களுக்கு விருந்து கொடுக்க பயன்படுத்தி வந்தான். அவனது விருந்தோம்பலுக்கு அவனது நண்பன் கதிரேசனும் உதவியாக இருந்தான். இருவரும் சேர்ந்து ஒரு சத்திரம் கட்டி மூன்று வேளையும் விருந்து கொடுக்க முடிவு செய்தனர். அதற்காக பணத்தைச் சேர்க்க கடினமாக உழைத்தனர்.

ஒரு நாள் சத்திரம் கட்டுவதற்கான முழுபணமும் சேர்ந்தது. ஆனால் கதிரேசன் மனதில் இவ்வளவு பணத்தை பிறருக்கு விருந்து கொடுப்பதற்காக இழப்பதா என யோசிக்கத் தொடங்கினான். இதைப் புரிந்து கொண்ட கண்ணன் விருந்தோம்பல் நமது பண்பாடு அதை நாம் நம் ஊரில் செய்வதால் நம் ஊருக்கு பெருமை. நமக்குப் பெருமை என எடுத்துக் கூறினான். தவறை உணர்ந்து கதிரேசன் மனதை நல்வழிப்படுத்தினான். இருவரும் இணைந்து சத்திரம் கட்டி விருந்து கொடுத்தனர். வழிப்போக்கர் அனைவரும் மகிழ்ந்து மனநிறைவுடன் வாழ்த்தினர். இருவரும் வாழ்விலும் உயர்ந்தனர்.

## **வயலும் வாழ்வும்** (கவிதைப்பேழை)

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 1. நாற்று 2. அறுவடை 3. தேர்ந்து + எடுத்து

**ஆ) பொருத்துக.**

1. நாற்று - நடுதல் 2. நீர் - பாய்ச்சுதல் 3. கதிர் - அறுத்தல் 4. களை - பறித்தல்

**இ) வயலும், வாழ்வும் பாடலில் உள்ள மோனை, எதுகை சொற்களை எழுதுக.**

மோனைச்சொற்கள் :

| | | |
|---|---|---|
| மடமடன்னு | சும்மாடும் | மணிபோல |
| மண்குளிர | சுறுசுறுப்பாய்க் | மனதையெல்லாம் |

எதுகைச் சொற்கள் :

| | | |
|---|---|---|
| சாலுசாலாத் | சேத்துக்குள்ளே | ஆளுகெல்லாம் |
| நாலு நாலா | நாத்தெல்லாம் | ஆளுபணம் |

**ஈ) பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கில் எழுதுக.**

1. பிடிக்கிறாங்க - பிடிக்கின்றனர் 2. இறங்குறாங்க - இறங்குகின்றனர் 3. வாரான் - வருகின்றான்

**உ) குறுவினா.**

**1. உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?**

உழவர்கள் நாற்று நட்டு, களை பறிக்கும் போது சேற்று வயலில் நண்டுகளையும் சேர்த்துப் பிடித்தனர்.

**2. நெற்கதிரிலிருந்து நெல்மணியை எவ்வாறு பிரிப்பர்?**

- அறுவடை செய்த நெற்கதிர்களைக் களத்தில் அடித்து நெல்லைப் பிரிப்பர்.
- நெல்தாளில் மீதமிருக்கும் நெல்மணிகளைப் பிரிப்பதற்காக மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்து பிரித்தெடுப்பர்.

**ஊ) சிறுவினா.**

**1. உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.**

- மாடுகளை ஏரில் பூட்டி நிலத்தை உழுவர். ● நாற்றங்காலில் இருந்து பிடுங்கி எடுக்கப்பட்ட நாற்றை நடுவர். அவ்வாறு நடும் நாற்று ஒரு சாணுக்கு ஒரு நாற்று வீதம் இருக்கும். ● பயிருக்குத் தேவையான நீரைப் பாய்ச்சுவர். பிறகு பயிர்களுக்கு இடையே வளர்ந்துள்ள களைகளைப் பறிப்பர்.
- பயிர்களுக்குத் தேவைக்கேற்ப பூச்சிக்கொல்லி மருந்துகள், இயற்கை உரங்களை பயன்படுத்துவர்.
- நெல் முற்றியதும் அறுவடை செய்வர்.

- அறுவடை செய்த நெல்தாள்களைக் கட்டி நெற்களத்தில் சேர்ப்பர். • பின் கதிரடித்து நெல்மணியைப் பிரித்து எடுப்பர். • எஞ்சிய நெல்மணியைப் பிரிக்க மாடுகளைப் பயன்படுத்தி மிதிக்கச் செய்வர். • பிறகு நெல்மணிகளை வெயிலில் காயவைத்து மூட்டைகளாகக் கட்டி வீட்டில் கொண்டு வந்து சேர்ப்பர்.

**எ) சிந்தனை வினா.**

**1. உழவுத்தொழிலில் காலந்தோறும் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் பற்றி எழுதுக.**

- குறிஞ்சி நில மக்கள் ஏர்க்கொண்டு உழாமல் வேளாண்மை செய்தனர். முல்லை நில மக்கள் கலப்பையின் உதவியோடு பயிர் செய்தனர். • ஆறு, குளம், ஏரி முதலிய நீர் நிலைகளில் இருந்து உழவர்கள் வயலுக்கு நீர் பாய்ச்சினர். பயிர் செய்தனர். • பிறப்பகுதிகளில் இருந்து வேறு சில பயிர்களைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்து பயிர் செய்தனர். • வானியல் பற்றி அறிந்ததால் மழை வரும் காலம் அறிந்து பயிர் செய்தனர். இயற்கை உரங்களான இலைதழைகள் கால்நடைச் சாணங்களைப் பயன்படுத்தினர். • இந்நிலை பிறகு கொஞ்சம் கொஞ்சமாக மாறி அதிக விளைச்சலுக்காக பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தி மண்வளத்தைக் கெடுத்தனர். மனிதன் செய்த வேலைகளையெல்லாம் இயந்திரங்கள் செய்ய ஆரம்பித்தது. • புதிய வகை வேளாண்மை புதிய புதிய நோய்களையும் கொண்டு வந்தன. சுற்றுச்சூழலையும் பாதித்தது. • இப்பொழுது மீண்டும் இயற்கை வேளாண்மையை நோக்கி அனைவரும் நகரத் தொடங்கியுள்ளனர். இவ்வாறு உழவுத்தொழில் காலந்தோறும் மாற்றம் அடைந்து வருகிறது.

## கற்பவை கற்றபின்

**1. வேளாண்மை சார்ந்த கருவிகளின் பெயர்களை எழுதி வருக.**

ஏர்க்கலப்பை, மண்வெட்டி, அரிவாள், கத்தி, உழவு இயந்திரம், கடப்பாறை.

## திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி (உரைநடை உலகம்)

## மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பாண்டிய 2. பொதிகை 3. தாமிரபரணி

**ஆ) பொருத்துக.**

1. தண்பொருநை - தாமிரபரணி
2. அக்கசாலை - பொன்நாணங்கள் உருவாக்கும் இடம்
3. கொற்கை - முத்துக்குளித்தல்
4. திரிகூடமலை - குற்றாலம்

**இ) குறுவினா.**

**1. தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?**

பச்சையாறு, மணிமுத்தாறு, சிற்றாறு, காரையாறு, சேர்வலாறு, கடனாநதி

**2. கொற்கை முத்து பற்றிக் கூறுக.**

★ நற்றிணை, அகநானூறு முதலான சங்க இலக்கியங்கள் கொற்கை முத்தின் சிறப்பைக் கூறுகின்றன. கொற்கையில் விளைந்த பாண்டி நாட்டு முத்து உலகப்புகழ் பெற்றதாகும். ★ கிரேக்க, உரோமாபுரி நாடுகளைச் சேர்ந்த யவனர்கள் முத்துகளை விரும்பி வாங்கிச் சென்றனர்.

**ஈ) சிறுவினா.**

**1. திருநெல்வேலிப் பகுதியில் நடைபெறும் உழவுத்தொழில் குறித்து எழுதுக.**

• திருநெல்வேலி மாவட்டம் உழவுத்தொழிலால் முதன்மை வகிக்கிறது. • தாமிரபரணி ஆற்றின் மூலம் இங்கு உழவுத்தொழில் நடைபெறுகின்றது. • குளத்துப்பாசனமும், கிணற்றுப்பாசனமும் கூடப் பயன்பாட்டில் உள்ளன. இரு பருவங்களில் நெல் பயிரிடப்படுகின்றது. • சிறுதானியங்கள், எண்ணெய்வித்துகள், காய்கனிகள், பருத்தி, பயறுவகைகள் போன்றவை பயிரிடப்படுகின்றன.

• தென்காசி, அம்பாசமுத்திரம், நாங்குநேரி, இராதாபுரம் போன்ற பகுதிகளில் வாழை பயிரிடப்படுகின்றது. இங்கு விளையும் வாழைத்தார்கள் தமிழ்நாடு மட்டுமின்றி கர்நாடகம், கேரளம் போன்ற பிற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. • நெல்லிக்காய் உற்பத்தியில் நெல்லை மாவட்டமே முதலிடம் வகிக்கின்றது.

**2. திருநெல்வேலிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.**

• முதல் தமிழ் இலக்கண நூலான அகத்தியத்தை எழுதிய அகத்திய முனிவர் வாழ்ந்த பொதிகை மலை திருநெல்வேலியில் உள்ளது. • சங்கப்புலவரான மாறோக்கத்து நப்பசலையார், நம்மாழ்வார், பெரியாழ்வார், குமரகுருபரர், திரிகூடராசப்பக் கவிராயர், கவிராசப்பண்டிதர் ஆகியோர் திருநெல்வேலிச் சீமையில் பிறந்து தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளனர். • அயல்நாட்டு அறிஞர்களான ஜி.யு.போப், கால்டுவெல், வீரமாமுனிவர் போன்றோரையும் தமிழின்பால் ஈர்த்த பெருமைக்குரியது திருநெல்வேலி மாவட்டம்.

**3. திருநெல்வேலியின் புவியியல் அமைப்புப் பற்றிக் கூறுக.**

• பொருநை எனப்படும் தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. • நகரின் நடுவே நெல்லையப்பர் கோவில். இக்கோவிலைச் சுற்றி நான்கு பக்கமும் மாடவீதிகள், அவற்றைச் சுற்றித் தேரோடும் வீதிகள் அமைந்துள்ளன. • அரசால் தண்டிக்கப்பட்டவர்கள் வைக்கப்பட்ட "காவற்புரைத்தெரு", தானியங்கள் விற்கும் "கூழைக் கடைவீதி", பொன் நாணயங்களை உருவாக்குவர் வாழ்ந்த "அக்கசாலை", பெருவணிகம் நடைபெற்ற "பேட்டை" என்னும் ஊர் போன்றவை அமைந்துள்ளது. • இத்தகு சிறப்பு மிகுந்த நகர அமைப்புகளைக் கொண்டு காலத்தால் புகழ்பெற்று நிற்கிறது திருநெல்வேலி நகரம்.

**சிந்தனை வினா**

**1. மக்கள் மகிழ்ச்சியாக வாழ ஒரு நகரம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

• தரமான கல்வியும் மருத்துவமும் அனைவருக்கும் இலவசமாக கிடைக்க வேண்டும். • சிறந்த போக்குவரத்து வசதி ஏற்படுத்த வேண்டும். • மரங்கள் அதிகமாக வளர்க்கப்பட வேண்டும்.
• ஆறுகள், ஏரி, குளங்கள் தூர்வாரப்பட்டு மழைநீர் சேமிக்கப்பட வேண்டும். • கோவில்கள், பூங்காக்கள், நூலகம், உடற்பயிற்சிக்கூடம் போன்றவை அமையப் பெற வேண்டும். • மக்கள் அனைவரும் இயற்கைச்சூழலில் வணிகம் செய்து வாழ வேண்டும்.

## கற்பவை கற்றபின்

1. மாணவர்கள் செய்திகளைச் சேகரித்து ஒப்படைக்க வேண்டும்.

**2. தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள் பற்றி செய்திகளைத் தொகுக்க.**

தமிழ்நாட்டில் மொத்தம் 15 மாநகராட்சிகள் உள்ளன அவை. 1. சென்னை 2. கோயம்புத்தூர் 3.திருச்சி 4.மதுரை 5.சேலம் 6. திருநெல்வேலி 7.திருப்பூர் 8. ஈரோடு 9. வேலூர் 10. தூத்துக்குடி 11. தஞ்சாவூர் 12. திண்டுக்கல் 13. நாகர்கோயில் 14. ஒசூர் 15. ஆவடி. இந்தியாவின் மாநிலமான தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளாக மாநகராட்சிகள் செயல்படுகின்றன. தமிழ்நாட்டின் முதலாவது மிகப்பெரிய மாநகராட்சி சென்னை ஆகும். இரண்டாவது கோயம்புத்தூர் மூன்றாவது திருச்சிராப்பள்ளி நான்காவது மதுரை ஐந்தாவது சேலம் ஆகும். இவை ஐந்தும் தமிழகத்தின் முக்கிய மாநகராட்சிகளாகும்.

## **திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்** ( விரிவானம் )
## மதிப்பீடு :

**அ) சிறுவினா.**

**1. திருநெல்வேலிக் கவிஞர்கள் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

தங்கள் கவித்திறத்தால் உலகையே ஆளும் கவிஞர்களில் திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்து திருநெல்வேலி புகழ் பெறச் செய்த கவிஞர்கள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பலபட்டடைச்சொக்கநாதப்புலவர் :

மதுரையிலிருந்து நெல்லைக்கு வந்தவர். நெல்லையில் எழுந்தருளியுள்ள காந்திமதி தாயைத் தரிசித்து உரிமையுடன் சுவாமியிடம் சிபாரிசு செய்ய வேண்டுகிறார்.

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் :

திருநெல்வேலிக்கு அருகிலுள்ள திருவைகுண்டத்துப் பெருமாளைப் போற்றிப் பாடியவர்.

நம்மாழ்வார் :

ஆற்றுக்குத் தென்கரையில் ஆழ்வார் திருநகரில் பிறந்தவர். இதன் பழைய பெயர் திருக்குருகூர். அவர் தமது ஈடுபாட்டைத் தமது திருவாய்மொழியில் பாடியுள்ளார்.

முத்தொள்ளாயிர ஆசிரியர் : இவர் கொற்கை நகர முத்து வணிகத்தை அனுபவித்துப் பாடியுள்ளார்.

சீதக்காதி : இவர் ஒரு பெருவணிகர். இவர் காயல் பட்டணத்தைச் சார்ந்தவர். இவர் பல புலவர்களை ஆதரித்தவர்.

அருணகிரிநாதர் : தாம் பாடிய திருப்புகழில் ஏரிநீர் நந்தவனங்களில் இருந்ததால் சேல்மீன்கள் துள்ளிக்குதித்து பூஞ்செடிகொடிகளை அழித்தன எனப் பாடியுள்ளார்.

அண்ணாமலையார். கழுகுமலைமுருகன் காவடிச்சிந்து, அழகிய சொக்கநாதப்புலவரின் சங்கரன் கோவில் கோதித்தாயின் பாடல் முக்கியமானவை. திருக்கருவை வெண்பா அந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, கலித்துறை அந்தாதி ஆகிய நூல்களில் கருவைநல்லூர் குறித்து புலவர் ஒருவர் பாடியுள்ளார். திருஞானசம்பந்தர் குற்றாலமலையின் அழகை நுண் துளி தூங்கும் குற்றாலம் என்றும், மாணிக்கவாசகரும், இத்தலத்தைப் பற்றி உற்றாரை யான்வேண்டேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திரிகூடராசப்பகவிராயர் தம் குற்றாலக் குறவஞ்சியில் இம்மலையின் வளத்தைக் குறி சொல்லுகின்ற பெண் கூறுவது போல் பாடியுள்ளார். இத்தகைய பெருமை மிக்க திருநெல்வேலியைப் பற்றியும் அங்கு வாழ்ந்த புலவர்களின் புலமையையும் நினைவில் கொள்வோம்.

**ஆ) வாக்கியத்தில் உள்ள வினைச்சொற்களை எடுத்து எழுதுக.**

1. படிப்பேன் 2. பாடுவாள் 3. எழுதுவான் 4. எழுதினாள் 5. விளையாடினர் 6. பறந்தது.

## **அணி இலக்கணம்** ( கற்கண்டு )

### மதிப்பீடு :

**1. உவமை, உவமேயம், உவமஉருபு - விளக்குக.**

- ஒரு சொல்லை மற்றொரு சொல்லோடு ஒப்பிட்டுக்கூறுவது உவமை அல்லது உவமானம் ஆகும்.
- உவமையால் விளக்கப்படும் பொருள் உவமேயமாகும்.
- உவமை உவமேயம் இரண்டுக்கும் இடையில் வரும் உருபு உவமஉருபாகும்.

எ.கா. தேன் போன்ற மொழி. தேன் - உவமை, போன்ற - உவமஉருபு, மொழி - உவமேயம்

**2. உவமை அணிக்கும், எடுத்துக்காட்டு உவமை அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?**

- உவமை அணி :

ஒரு பாடலில் உவமையும் உவமேயமும் வந்து உவமஉருபு வெளிப்படையாக வந்தால் அது உவமை அணியாகும்.

- எடுத்துக்காட்டு உவமையணி :

உவமை ஒரு தொடராகவும், உவமேயம் ஒரு தொடராகவும் வந்து உவமஉருபு மறைந்து வந்தால் அது எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.

### கற்பவை கற்றபின்

**பின்வரும் தொடர்களில் உள்ள உவமை, உவமேயம், உவமஉருபு ஆகியவற்றைக் கண்டறிந்து எழுதுக.**

| தொடர்கள் | உவமை | உவமேயம் | உவமஉருபு |
|---|---|---|---|
| மலரன்ன பாதம் | மலர் | பாதம் | அன்ன |
| தேன் போன்ற தமிழ் | தேன் | தமிழ் | போன்ற |
| புலிபோலப் பாய்ந்தான் சோழன் | புலி | சோழன் | போல |
| மயிலொப்ப ஆடினாள் மாதவி | மயில் | மாதவி | ஒப்ப |

## புதுமை விளக்கு ( கவிதைப்பேழை )

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** 1. துன்பம் 2. ஞானம் + சுடர் 3. இன்புருகு

**ஆ) பொருத்துக.**

அன்பு - தகளி ஆர்வம் - நெய் சிந்தை - இடுதிரி ஞானம் - விளக்கு

**இ) குறுவினா.**

**1. பொய்கையாழ்வாரும், பூதத்தாழ்வாரும் அகல்விளக்காக எவற்றை உருவகப்படுத்தினார்?**

★பொய்கையாழ்வார் பூமியை அகல்விளக்காக உருவகப்படுத்துகின்றார்.

★பூதத்தாழ்வார் அன்பை அகல்விளக்காக உருவகப்படுத்துகின்றார்.

**2.பொய்கை ஆழ்வார் எதற்காகப் பாமாலை சூட்டுகிறார்?**

பொய்கையாழ்வார் தம்முடைய கடல் போன்ற துன்பம் நீங்குவதற்காகத் திருமாலுக்குப் பாமாலை சூட்டுகிறார்.

**சிறுவினா.**

**1. பூதத்தாழ்வார் ஞானவிளக்கு ஏற்றும்முறையை விளக்குக.**

பூதத்தாழ்வார் தம் உள்ளத்தில் எழுகின்ற அன்பை அகல்விளக்காகவும், ஆர்வத்தை நெய்யாகவும், இனிமையால் உருகும் மனத்தையே இடுகின்ற திரியாகவும் கொண்டு ஞானஒளியாகிய சுடர்விளக்கை மனம் உருக திருமாலுக்கு ஏற்றுகிறார். விளக்கு ஏற்ற அகல்விளக்கு, நெய், திரி, தேவை. பூதத்தாழ்வார் அன்பு, ஆர்வம், மனம் ஆகியவற்றைக் கொண்டு விளக்கு ஏற்றுகிறார்.

**சிந்தனைவினா.**

**1.பொய்கையாழ்வார் ஞானத்தை விளக்காக உருவகப்படுத்துகிறார். நீங்கள் எவற்றையெல்லாம் விளக்காக உருவகப்படுத்துவீர்கள்?**

நான் ஒழுக்கம், அன்பு ஆகியவற்றை விளக்காக உருவகப்படுத்துவேன்.

## கற்பவை கற்றபின்

**பன்னிரு ஆழ்வார்களின் பெயர்களைத் தொகுக்க.**

1. பொய்கை ஆழ்வார் 2.பேயாழ்வார் 3.நம்மாழ்வார் 4. ஸ்ரீ ஆண்டாள் 5. மதுரகவி ஆழ்வார், 6. தொண்டரடிப்பொடிஆழ்வார் 7. பூதத்தாழ்வார் 8. திருமழிசை ஆழ்வார் 9. திருமங்கையாழ்வார், 10. பெரியாழ்வார் 11. குலசேகரஆழ்வார் 12. திருப்பாணாழ்வார்.

## அறம் என்னும் கதிர் ( கவிதைப்பேழை )

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 1. வாய்மையே 2. இனிமை + சொல் 3. அறக்கதிர்

**ஆ) பொருத்துக.**

1. விளைநிலம் - இன்சொல் 2.விதை - ஈகை
3. களை - வன்சொல் 4. உரம் - உண்மை

**இ) குறுவினா.**

**1. அறக்கதிர் விளைய எதனை எருவாக இட வேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்?**

அறக்கதிர் விளைய உண்மையை எருவாக இட வேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்.

**2. நீக்க வேண்டிய களை என்று அறநெறிச்சாரம் எதனைக் குறிப்பிடுகிறது?**

நீக்க வேண்டிய களை என்று அறநெறிச்சாரம் குறிப்பிடுவது கடுஞ்சொற்கள் ஆகும்.

**ஈ) சிறுவினா.**

**1. இளம் வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை?**

- இனிய சொல்லாகிய விளைநிலத்தில் ஈகை என்னும் பண்பை விதையாக விதைக்க வேண்டும்.
- வன்சொல்லாகிய களையை நீக்கி உண்மை பேசுதல் என்னும் எருவினை இட வேண்டும்.
- அன்பாகிய நீரைப்பாய்ச்சி அறமாகிய கதிரை அறுவடை செய்ய வேண்டும். இளம் வயதிலேயே இதனை செய்ய வேண்டும் என்கிறார் முனைப்பாடியார்.

**உ) சிந்தனை வினா.**

**1. இளம் வயதிலேயே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நற்பண்புகள் எவை எனக் கருதுகிறீர்கள்?**

● உதவி செய்யும் குணம் ● உண்மை பேசுதல் ● மன்னிக்கும் குணம் ● ஒற்றுமையாக இருத்தல் ● நன்மை செய்தல் ● இரக்கம் காட்டுதல் ● பிறர்நலம் பேணுதல் ● கீழ்ப்படிந்து நடத்தல்.

**கற்பவை கற்றபின்**

**1. பிறருடன் பேசும் போது நான் பயன்படுத்தும் இன்சொற்கள் :**

● வயதில் மூத்தவர்களிடம் பேசும் போது மரியாதையுடன் பேசுவேன். ● எவரையும் நீ, வா, போ என ஒருமையில் அழைப்பதைத் தவிர்ப்பேன். ● யாரையும் இகழ்ந்து பேச மாட்டேன். ● பேச்சில், செயலில் வன்முறையைப் பயன்படுத்தமாட்டேன். ● பிறருடைய மனம் புண்படாத வகையில் இன்சொற்களைப் பேசுவேன்.

**2. என் அன்னை பயன்படுத்திய இன்சொல்லால் நான் மகிழ்ந்த இசைவு :**

என் அன்னை எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இன்சொற்களையே பேசுவார். ஒரு முறை விளையாடும் பொழுது தெரியாமல் ஒரு பொருளை கீழே தள்ளி உடைத்துவிட்டேன். என் அம்மா என்னை அடிப்பார்கள் திட்டுவார்கள் என்று பயந்து நின்றேன். ஆனால்

அங்கு வந்த என் அம்மா என்னை அடிக்காமல் திட்டாமல் என்னிடம் வந்து பொறுமையாக நடந்ததைக் கேட்டார். நான் உண்மையைச் சொல்லி மன்னிப்பு கேட்டதும், என்னிடம் சிரித்த முகத்துடன் நான் உண்மையைச் சொன்னதற்கும் மன்னிப்பு கேட்டதற்கும் பாராட்டினார். பின்பு இவ்வாறு நடக்காமல் எவ்வாறு விளையாட வேண்டும் என்று அன்பாக எடுத்துக்கூறினார். இந்த அன்பான கண்டிப்பு என்னை எப்பொழுதும் பொறுப்புடன் இருக்க வேண்டும் என்ற உணர்வைத் தந்தது.

**ஒப்புரவு நெறி** ( உரைநடை உலகம் )

**மதிப்பீடு :**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பொதுவுடைமை 2. ஒப்புரவு 3. மருந்து 4. பாரதிதாசன் 5. திருக்குறள்

**ஆ) எதிர்ச்சொற்களைப் பொருத்துக.**

1. எளிது - அரிது 2. ஈதல் - ஏற்றல் 3. அந்நியர் - உறவினர் 4. இரவலர் - புரவலர்

**இ) தொடர்களில் அமைத்தெழுதுக.**

1. நல்ல பண்புள்ள மாணவன் என்ற பெயர் பெறுவது என் <u>குறிக்கோளாகும்.</u>
2. நமது அடிப்படை <u>கடமைகள்</u> என்ன என்பதை அறிந்து நடக்க வேண்டும்.
3. இயற்கைச்சூழலில் வாழ்வது நம் <u>வாழ்நாள்</u> கடமையாகும்.
4. அனைவரும் <u>சிந்தித்து</u> செயல்பட வேண்டும்.

**ஈ) குறுவினா**

**1. செல்வத்தின் பயன் யாது?**

செல்வத்தின் பயன் பிறருக்கு உதவி செய்தலே ஆகும்.

**2. ஒப்புரவு குறித்துக் கூறும் குறள் ஒன்றை எழுதுக.**

“கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு” - (குறள் 21)

**3. வறுமைச்செல்வம் இவற்றைத் தமிழ் மரபு எவ்வாறு கூறுகிறது?**

வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை மருந்து என்றும் கூறுவது தமிழ் மரபாகும்.

உ) சிறுவினா.

1. புகழின் ஒளி யாது? விளக்கம் தருக.

புகழே அறத்தின் ஒளி வடிவமாகும். நல்லவர்களால் போற்றப்படுவதே புகழ். புகழ் என்றும் நிலைத்து நிற்கும். ஒப்புரவு இல்லாத இடத்தில் புகழ் நிலைத்து நிற்காது. ஒப்புரவு நெறியோடு வாழும் இயற்கையே புகழ் நிறைந்த வாழ்க்கை ஆகும்.

2. ஊருணியையும், மரத்தையும் எடுத்துக்காட்டிப் பாடம் கூறும் செய்திகள் யாவை?

"ஊருணி நீர்நிறைந்து அற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு."

உலகினர் விரும்புமாறு உதவி செய்து வாழ்பவரது செல்வமானது ஊருணியில் நிரம்பிய நீர் போலப் பலருக்கும் பயன்படும்.

"பயன்மரம் உள்ளூர்ப்பழுத்து அற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்."

நற்பண்பு உடையவரிடம் செல்வம் சேர்வது ஊருக்குள் பழமரத்தில் பழங்கள் பழுத்திருப்பதைப் போன்றது.

3. ஒப்புரவுக்கும், உதவி செய்தலுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

| ஒப்புரவு | உதவி செய்தல் |
|---|---|
| ● ஒப்புரவு என்பது பொது நன்மைக்காகச் செய்யும் பயன் கருதாத தொண்டு.<br>● உலகமெல்லாம் ஒன்று எனக் கருதி ஒருவருக்கொருவர் உதவி வாழ்வது ஒப்புரவாகும்.<br>● நம்மைச் சுற்றியுள்ளவர்களைப் புரிந்து கொண்டு கூட்டுறவான வாழ்வு தோன்றும் போது நிகழ்வது ஒப்புரவாகும். | ● உதவி செய்தல் என்பது நலிந்தோர்க்கு உதவுதல்.<br>● பிறருடைய தேவையைப் பூர்த்தி செய்தல்.<br>● பயனை எதிர்பார்க்காமல் செய்யும் உதவியே சிறந்தது. |

எ) அகர வரிசைப்படி சொற்களை சீர்செய்க : அ. உரைத்தல், கூறுதல், செப்புதல், சொல்லுதல்

ஏ) ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளையறிதல் :

| தலை | தளை | தழை |
|---|---|---|
| உறுப்பு | கட்டு | இலை |

ஐ) வேர்ச்சொல்லைக் கண்டறிக : மகிழ்ந்தனர் - மகிழ்.

## உண்மை ஒளி ( விரிவானம் )

### மதிப்பீடு :

அ) உண்மை ஒளி கதையை சுருக்கி எழுதுக.

மரணம் என்பது அனைவருக்கும் பொதுவானது. அது எல்லா வீட்டிலும் கண்டிப்பாக நுழையும் என்பதை ஏழை பெண்ணுக்கு உணர்த்தும் கதை உண்மை ஒளி என்னும் கதையாகும்.

சுஜாதை யாரும் இல்லாத ஏழைப்பெண். அவளின் ஒரே ஆறுதல் அவனின் மகன் மட்டுமே. அவனும் விளையாடும் பொழுது நாகம் தீண்டி உயிர் விடுகிறான். அவனை மீண்டும் உயிர்ப்பிக்க விரும்பியவள் புத்தரைத் தேடிச் செல்கிறாள்.

புத்தர் கண்களை மூடி தியானத்தில் இருக்கிறார். அவரின் காதில் அப்பெண்ணின் விசும்பல் ஒலி கேட்கிறது. புத்தர் தன் கண்களைத் திறந்து பார்க்கிறார். அவர் முன்பாக மண்டியிட்டு அப்பெண் தன் துயரத்தைக் கூறி கதறினாள். மகனை உயிர்ப்பித்து தருமாறு வேண்டினாள். புத்தர் உன் மகனை நிச்சயம் நான் உயிர்ப்பித்து தருகிறேன். அதற்காக நீ செய்ய வேண்டியது இதுவரை சாவு என்பதே இல்லாத ஒரு வீட்டில் இருந்து ஒரு பிடி கடுகு வாங்கி வா என்றார்.

அப்பெண் மகனை தோளில் சுமந்தபடி ஒவ்வொரு வீடாகச் சென்று கடுகு கேட்டு கிடைக்காமல் திரும்பி வந்தாள். காலையில் உதித்த செங்கதிர் மாலையில் மறைவதும் கடலில் எழும் அலை விழுவதும் எழுவதும் இயல்பு. அது போல இறப்பு என்பதும் இயல்பே என்றார் புத்தர்.

புத்தரின் உரையைக் கேட்ட சுஜாதையின் மனதில் உண்மை ஒளி வெளிப்பட்டது. இறந்த அவள் மகனை அடக்கம் செய்ய புறப்பட்டாள்.

## கற்பவை கற்றபின்

ஜென் கதை : நிதானம்

தற்காப்புக் கலையினைக் கற்றுக்கொள்ள விரும்பிய ஒரு மாணவன் குருவை அணுகி, இக்கலையினைக் கற்றுக் கொள்ள எவ்வளவு காலம் தேவை? எனக் கேட்டான். குரு பத்து வருடங்கள் எனப் பதில் அளித்தார்.

குருவின் பதிலால் மாணவன் பொறுமை இழந்து திருப்தியற்றவனானான். மீண்டும் குருவிடம், பத்து வருடங்களை விட விரைவாகக் கற்க விரும்புகிறேன். ஒவ்வொரு நாளும் பயிற்சி செய்வேன். தேவைப்பட்டால் பயிற்சிகளை 10 மடங்கு அதிகமாகவே எடுத்துக் கொள்வேன். ஆகவே இதன் படி கற்றுக் கொள்ள எவ்வளவு காலம் தேவை என்றான்?

குரு பதிலாக இருபது வருடங்கள் என்றார். வேகத்தினால் கற்றுக்கொள்ள முடியாது. இலக்கு மீது உள்ள ஆர்வத்துடன் நிதானம், உறுதி என்பனவற்றுடன் சேர்ந்து இருக்க வேண்டும் என்றார். மாணவனும் இப்பொழுது நிதானமாய் கற்கத் தொடங்கினான்.

## அணி இலக்கணம் ( கற்கண்டு )

## மதிப்பீடு :

**1. உருவக அணியை விளக்குக.**

உவமை வேறு உவமிக்கப்படும் பொருள் வேறு என்று இல்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றும்படி கூறுவது உருவகஅணியாகும்.

எ.கா. : "இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக"

இப்பாடலில் இன்சொல் வயலாகவும், ஈதல் விதையாகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளது

**2. உருவக அணிக்கும், ஏகதேச உருவக அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?**

| உருவகஅணி | ஏகதேச உருவக அணி |
|---|---|
| உவமை வேறு உவமிக்கப்படும் பொருள் வேறு என்று இல்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றும்படி கூறுவது.<br>எ.கா.<br>"இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக" | கூறப்படும் இரு பொருள்களில் ஒன்றை மட்டும் உருவகப்படுத்தி மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.<br>எ.கா. " பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் கருமமே னட்டளைக் கல்" |

## கற்பவை கற்றபின்

உவமைத்தொடர்கள் : மலர் போன்ற முகம், அமுதம் போன்ற மொழி, கயல் போன்ற கண், மலர் போன்ற அடி, வில் போன்ற புருவம்

உருவகம் : முகமலர், பொழியமுது, கண்கயல், அடிமலர், புருவமில்

## மொழியை ஆள்வோம்

**அ) மீட்டுணர்தல் :**

1. செய்தி வாக்கியம் 2. வினா வாக்கியம் 3. கட்டளை வாக்கியம்
4. உணர்ச்சி வாக்கியம் 5. தனி வாக்கியம் 6. தொடர் வாக்கியம்

**ஆ) ஒருமை, பன்மை பிழை நீக்குக.**

1. மாடு மேய்ந்தது 2. அவன் வந்தான் 3. பறவைகள் பறந்தன
4.நாய்கள் குரைத்தது 5. பூக்கள் பூத்தன 6. சிறுவர்கள் விளையாடினர்

**இ) ஆங்கிலச்சொல்லை நீக்கி, நல்ல தமிழ்ச்சொற்களை எழுதுக.**

1. மிதிவண்டி 2. பேருந்து நிலையம் 3. தொடர்வண்டி 4. சாலை 5. பள்ளி

ஈ) பொருத்துக.

1. முதல் திருவந்தாதி - பொய்கையாழ்வார்
2. இரண்டாம் திருவந்தாதி - பூதத்தாழ்வார்
3. அறநெறிச்சாரம் - முனைப்பாடியார்
4. பழமொழி - முன்றுறை அரையனார்

**கட்டுரை எழுதுக. : ஒற்றுமையே உயர்வு**

முன்னுரை :

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்று கூறுவார்கள். உலக அமைதியும் வளர்ச்சியும் உலக மக்களின் ஒற்றுமையாக தங்கி இருக்கிறது. இங்கு யாரும் தனி மனிதர்கள் கிடையாது. ஒற்றுமையே உயர்வு மற்றும் மகிழ்வு ஆகும்.

முக்கியத்துவம் :

ஒருவரையொருவர் புரிந்து கொண்டு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் ஒற்றுமையாக, வாழ்ந்தால் தான் வாழும் வாழ்க்கை அர்த்தமாகும். உலக நாடுகளின் யுத்தம் ஒற்றுமை இன்மையாலேயே உண்டாகிறது.

ஒற்றுமையின் நன்மைகள் :

கூட்டம் கூடுவது வேறு ஒற்றுமை என்பது வேறு. ஒற்றுமையில் உண்மை இருக்கும். உழைப்பும், அன்பும் இருக்கும். உலகில் மனிதன் சாதித்த பல விஷயங்கள் ஒற்றுமையில் நிகழ்ந்த அற்புதமாகும்.

முடிவுரை :

நாம் வாழும் வாழ்க்கை குறுகியதாகும். இக்காலத்தில் இரக்கம், பிறர்நலம், அன்பு, உண்மை போன்ற அற்புத குணங்களுடன் வீட்டிலும், பள்ளியிலும், நாட்டிலும் ஒற்றுமையாக வாழ்வோம். உயர்வு அடைவோம். நாட்டையும் உயர்த்துவோம்.

**நற்குணங்களின் பட்டியல்**

எதிரிக்கும் உதவுங்கள், அன்பு வார்த்தை பேசுங்கள், நல்ல நட்பை வளர்த்தல், பாசமுடன் பழகுதல், நல்லெண்ணம் விதைத்தல்.

## **திருக்குறள்** ( வாழ்வியல் )

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 1. வயல் 2. பிறப்பால் 3. நாடு + என்ப 4. கண்ணில்லது

**ஆ) உவமையணி பயின்று வரும் குறளை எழுதுக.**

"வினையான் வினையாக்கிக் கோடல் தனைகவுன்
யானையால் யானையாத் தற்று."

**இ) குறுவினா.**

**1. ஒரு செயலைச் செய்ய எவற்றையெல்லாம் ஆராய வேண்டும்?**

பொருள், கருவி, காலம், இடம், செயல் இந்த ஐந்தையும் எண்ணியே ஒரு செயலைச் செய்ய வேண்டும்.

**2. ஒரு நாட்டுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும்?**

தெளிந்த நீர், நிலம், உயர்ந்தமலை, குளிர்ந்த நிழலை உடைய காடு ஆகிய நான்கும் ஒரு நாட்டின் அரண்களாகும்.

**3.சிறந்த நாட்டின் இயல்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை?**

- மிக்கபசி, ஓயாதநோய், அழிவு செய்யும் பகை இல்லாத நாடு சிறந்த நாடாகும். பெரியளவில் முயற்சியில்லாமல் வளம் தரும் நாடே சிறந்த நாடாகும்.

**ஈ) படங்களுக்கு பொருத்தமான திருக்குறளை எழுதுக.**

1. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல் காடும் உடையது அரண்.
2. எனைமாட்சித்து ஆகியக் கண்ணும் வினைமாட்சி இல்லார்கண் இல்லது அரண்.

## மலைப்பொழிவு ( கவிதைப்பேழை )

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக.**

1. பொறுமை 2. உலகம் 3. மலை+அளவு 4. தன்+நாடு 5. இவையில்லாது

**ஆ) பொருத்துக.**

1. சாந்தம் - அமைதி 2. மகத்துவம் - சிறப்பு
3. தாரணி - உலகம் 4. இரக்கம் - கருணை

**இ) குறுவினா.**

**1. இந்த உலகம் யாருக்குரியது?**

சாந்தம் என்னும் அமைதியான பண்புடையவருக்குரியது இந்த உலகமாகும்.

**2.உலகம் நிலை தடுமாறக் காரணம் என்ன?**

சாதி வேறுபாடுகளாலும், கருத்து வேறுபாடுகளாலும் இவ்வுலகம் நிலை தடுமாறுகிறது.

**3.வாழ்க்கை மலர்ச்சோலையாக மாற என்ன செய்ய வேண்டும்?**

ஆசையில் விழும் மனிதன் வாழ்வு பாலைவனமாகும். தூய மனதோடு வாழ நினைத்தால் வாழ்க்கை மலர்ச்சோலையாக மாறிவிடும்.

**ஈ) சிறுவினா.**

**1. சாந்தம் பற்றி இயேசுகாவியம் கூறுவன யாவை?**

மனித வாழ்க்கையில் மிகவும் தேவைப்படுவது சாந்தம் என்னும் அமைதியாகும். அமைதி என்னும் பண்பு உடையவர்களுக்கு உலகம் உரியது. அமைதியே மண்ணையும், விண்ணையும் ஆட்சி செய்யும் பெருமையுடையது என்றார் இயேசுநாதர். சாதி பேதங்களால் இந்த உலகம் நிலை மாறிக் கொண்டிருக்கிறது. அறம் என்னும் தர்மத்தை ஏற்று சண்டைகள் நீங்கி, பொருளாதாரத்திலும் அறத்தை பின்பற்ற வேண்டும். இரக்கம் உடையவர் பேறு பெற்றோர் என்றார் இயேசுபிரான். பிற உயிர்களின் மீது இரக்கம் காட்டுபவர் இறைவனின் இரக்கத்தைப் பெறுவர். இதுவே அவர்களின் பரிசு. தூயமனதுடன் வாழ்பவரின் வாழ்க்கை மலர்ச்சோலையாகும். தன் நாடு பிறர் நாடு என்னும் பயனற்ற போட்டிகளும், கனவுகளும் மறைந்து அமைதியாய் வாழ்ந்தால் இதயம் மலையளவு உயர்ந்ததாக மாறும்.

**உ) சிந்தனைவினா.**

**1.எல்லா மக்களும் ஒற்றுமையாக வாழ என்ன செய்ய வேண்டும்?**

● சாதி, மத பேதங்கள் மாற வேண்டும். ● இயற்கை அனைவருக்கும் பொது என்ற எண்ணம் வளர வேண்டும். ● மனிதம் என்னும் குணம் மனிதர்களிடம் நிலை பெற வேண்டும். ● பள்ளியில், அலுவலகத்தில் கல்லூரியில் என அனைத்து இடங்களிலும் ஒருவருக்கொருவர் நட்புடனும், மரியாதையுடனும் பழக வேண்டும். ● சிறந்த கல்வி, சிறந்த மனிதர்களை உருவாக்கும். அதனை அனைவரும் கற்க வேண்டும்.

### கற்பவை கற்றபின்

**இயேசுவின் வாழ்வில் நடந்த சுவையான நிகழ்வு ஒன்றினை அறிந்து வந்து வகுப்பறையில் பகிர்க.**

ஒரு பெண் பன்னிரண்டு ஆண்டுகளாகத் தீராத நோயினால் துன்பப்படுகின்றாள். அவள் எப்படியாவது அந்நோய் குணமாக வேண்டும் என்று நினைத்தாள். அவள் கூட்டத்திற்கிடையில் நின்றிருந்த இயேசுவின் பின்னால் போய் அவருடைய அங்கியின் ஓரத்தைத் தொட்டாள். உடனடியாக அவள் குணமாகிவிட்டாள். அப்போது இயேசு யார் என்னைத் தொட்டது? என்று கேட்டார். அந்தப் பெண் பயந்து போனாள். பிறகு அவர் முன்னால் வந்து உண்மையைச் சொன்னாள். இயேசு அவளிடம் மகளே நிம்மதியாகப் போ என்று ஆறுதலாகச் சொன்னார்.

## தன்னை அறிதல் ( கவிதைப்பேழை )

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 1. குயில் 2. தான் + ஒரு

**ஆ) குறுவினா.**

**1. காக்கை ஏன் குயில் குஞ்சைப் போகச் சொன்னது?**

காக்கை இனத்திற்கும் குயில் இனத்திற்கும் வேறு வேறு தனித்தன்மை அதனால் இரண்டும் ஒரே கூட்டில் வாழ இயலாது என்பதால் காக்கை குயிலைப் போகச் சொன்னது.

**2. குயில் குஞ்சு தன்னை எப்போது குயில் என உணர்ந்தது?**

ஒரு நாள் விடியலில் குயில்குஞ்சு "கூக்கூ" என்று கூவியது. அப்போது தான் ஒரு குயில் என்று உணர்ந்தது.

**இ) சிறுவினா.**

**1.குயில் குஞ்சு தன்னம்பிக்கையுடன் வாழத் தொடங்கிய நிகழ்வை எழுதுக.**

● குயில் ஒன்று காக்கை கூட்டில் முட்டையிட, குயில்குஞ்சு தன்னைக் காக்கை என எண்ணி வாழ்ந்தது. ● காக்கையைப் பிரிந்த குயில் தனியே வாழ அஞ்சியது. ஒரு நாள் காலை "கூ" என்று கூவியது. தான் குயில் என்பதையும், தன் குரல் தன் பலம் என்பதையும் உணர்ந்து தன்னம்பிக்கையுடன் வாழத் தொடங்கியது. ● நாமும் நம் பலம் அறிந்து நம்மை உணர்ந்து முன்னேறலாம்.

**ஈ) சிந்தனை வினா.**

**1.உங்களிடம் உள்ள தனித்தன்மைகளாக நீங்கள் கருதுவன யாவை?**

- அனைவரிடமும் நட்புடன் பழகுதல்
- பிறருக்கு உதவி செய்தல்
- பெரியோரை மதித்தல்
- பிறர் குறைகளைக் கூறாமை
- சிறந்த நூல்களைத் தேடிப் படித்தல்

## கற்பவை கற்றபின்

**1. பறவைகள் / விலங்குகள் ஆகியவற்றுக்குரிய தனித்தன்மைகளைப் பட்டியலிடுக.**

| பறவைகள் | விலங்குகள் |
|---|---|
| ● இரு கால்களை உடையது.<br>● முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும்.<br>● மென்மையான உடலமைப்பு கொண்டவை.<br>● பறக்கும் தன்மை கொண்டவை. | ● நான்கு கால்களை உடையது.<br>● குட்டிப்போட்டு இனப்பெருக்கம் செய்யும்.<br>● வலிமையான உடலமைப்பு கொண்டவை.<br>● நடக்கும் தன்மை கொண்டவை. |

## கண்ணியமிகு தலைவர் (உரைநடை உலகம்)

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. எளிமை 2. சமுதாய வழிக்காட்டி 3. ஒத்துழையாமை 4. நாடாளுமன்றம்
5.எதிர் + ஒலித்தது 6. முதுமொழி

**ஆ) குறுவினா.**

**1. விடுதலைப் போராட்டத்தில் காயிதே மில்லத் அவர்களின் பங்கு பற்றி எழுதுக.**

காந்தியடிகள் அறிவித்த ஒத்துழையாமை இயக்கத்தில் தமது கல்வியை விட நாட்டின் விடுதலையே மேலானது என்று எண்ணி கலந்து கொண்டார்.

**2. காயிதேமில்லத் அவர்கள் தன் குடும்பத்திலும் எளிமையைக் கடைப்பிடித்தார் என்பதற்குச் சான்றாக உள்ள நிகழ்வை எழுதுக.**

காயிதேமில்லத் தம் ஒரே மகனுக்கு அவரது இல்லத்திலேயே எவ்வித ஆடம்பரமும் இல்லாமல் மிக எளிமையாகத் திருமணத்தை நடத்தினார். பெண் வீட்டாரிடம் மணக்கொடையும் பெறவில்லை.

இ) சிறுவினா.

**ஆட்சிமொழி பற்றிய காயிதேமில்லத் கருத்தை விளக்குக.**

● இந்திய விடுதலைக்குப்பின் நாட்டின் ஆட்சிமொழியைத் தேர்வு செய்வது தொடர்பான கூட்டம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. ● அதிகமான மக்கள் பேசும் மொழியை ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்று சிலரும் பழமை வாய்ந்த மொழியை ஆட்சிமொழியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சிலரும் பரிந்துரை செய்தனர். ● காயிதேமில்லத் அவர்கள் பழமையான மொழிகளில் ஒன்றைத்தான் ஆட்சிமொழியாக்க வேண்டும் என்றார். ● முதன்முதலாக பேசப்பட்ட மொழி, திராவிட மொழிகளில் இலக்கியச்செறிவு கொண்ட மொழி எனவே தமிழ் மொழியை நாட்டின் ஆட்சிமொழியாக அறிவிக்க வேண்டும் என்று கூறினார்.

ஈ) சிந்தனை வினா.

**நீங்கள் ஒரு தலைவராக இருந்தால் எத்தகைய மக்கள் நலப்பணிகளைச் செய்வீர்கள்?**

● மக்கள் அனைவருக்கும் அடிப்படைத் தேவையான உணவு, உடை, இருப்பிடம் கிடைக்கச் செய்வேன். ● கல்வி, மருத்துவமும் அனைவருக்கும் இலவசமாக கிடைக்கப் பாடுபடுவேன். ● இயற்கை ஆதாரங்களான மலை, காடு, நீர்நிலைகளைப் பாதுகாப்பேன். ● பேரிடர் காலங்களில் மக்களைப் பாதுகாக்க முதல் ஆளாய் முன் நிற்பேன்.

## கற்பவை கற்றபின்

**எளிமையின் அடையாளமாகத் திகழ்ந்த காமராசர், கக்கன் போன்ற தலைவர்களின் எளிமையைக் குறித்து மாணவர்கள் செய்தி திரட்டுக.**

காமராசர், கக்கன் போன்ற தலைவர்களின் எளிமையைக் குறித்து மாணவர்கள் தாமாகவே முன் வந்து செய்தி திரட்டி வர வேண்டும்.

## காரியத்தில் கண் (விரிவானம்)

### மதிப்பீடு :

நெடுவினா.

**நன்றாக கல்வி கற்க வேண்டும் என்ற ஆவல் எவ்வாறு தீபனுக்கு ஏற்பட்டது?**

தீபன் ஒரு சுட்டிப்பையன். பள்ளியிலும் சரி, வீட்டிலும் சரி எப்பொழுதும் பேசிக்கொண்டே இருப்பான். பாடப்புத்தகங்களைப் படிப்பதற்குப் பதிலாக நிறைய பத்திரிக்கைகளில் உள்ள சிறுசிறு கேள்விகளைப் படித்துவந்து அனைவரையும் மடக்குவான். இதில் அவனுக்கு நிறைய இன்பம் இருந்தது. இதனால் அவன் படிப்பு கெடுவதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. அதனால் அவன் படிப்பு பாதியிலேயே நின்றது.

தீபனை அவனது பெற்றோர் கிராமத்தில் உள்ள பாட்டி வீட்டில் விட்டனர். அங்கு வயலில் மேற்பார்வை பார்க்கும் வேலை அவனுக்கு கிடைத்தது. அங்கு வேலை செய்பவர்களிடம் தீபன் தொணதொணவென பேச ஆரம்பித்தான். அதனால் அங்கு வேலை கெட்டது. அதனால் வயலின் குத்தகைக்காரர் தீபனைத் திருத்த ஒரு வயதான ஆசிரியரிடம் விட்டார்.

தீபனின் குணத்தை அறிந்த ஆசிரியர் தான் மாலையில் எடுக்கும் வயது முதிர்ந்தவருக்கான கல்வி கற்பிக்கும் இடத்திற்கு அழைத்து சென்றார். அங்கு தீபன் பேசுவது அனைவருக்கும் பிடித்தது. அனைவரும் ஆவலுடன் கேட்டதால் சினிமா, தொலைக்காட்சி, அரசியல் என அலசி ஆராய்ந்து பேசத் தொடங்கினான். பேச்சின் மிகுதியால் நிறைய படிக்க வேண்டும், ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற ஆவல் அவனுக்குப் பிறந்தது.

நல்ல விஷயங்களை எல்லோருக்கும் எடுத்துச்சொல்ல வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு நூல் நிலையமாக ஏறி இறங்கி படித்தான். வீணான வாதங்களை விட்டுவிட்டு நல்ல கருத்துகளைத் தேடிப் பார்த்தான். பள்ளிப்படிப்பை சரியாக முடித்தால் பெரிய அறிஞனாக வரலாம் என நினைத்து படிக்க ஆரம்பித்தான். இன்று ஒரு சிறந்த பேராசிரியராக பல நல்ல மாணவர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறான் தீபன்.

### கற்பவை கற்றபின்

1. **பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் கல்வி பற்றிக் கூறும் நீதி நூல்கள் எத்தனை?**

- நாலடியார் • திரிகடுகம் • நான்மணிக்கடிகை • ஏலாதி • இன்னா நாற்பது • பழமொழி நானூறு
- இனியவை நாற்பது • ஆசாரக்கோவை • திருக்குறள் • சிறுபஞ்சமூலம் • முதுமொழிக்காஞ்சி

2. **கல்விச்செல்வம் குறித்துத் திருக்குறளை ஆராய்ந்து தொகுப்பேடு உருவாக்குக.**

கல்வி, கல்லாமை முதலிய அதிகாரங்களைப் படித்து செய்திகளை மாணவர்கள் தாங்களாகவே தொகுக்கவும்.

### ஆகுபெயர் ( கற்கண்டு )

### மதிப்பீடு :

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பொருளாகு பெயர் 2. சினையாகு பெயர் 3. இரட்டைக்கிளவி 4. நான்கு

**ஆ) குறுவினா.**

**1. ஒரு பெயர்ச்சொல் எப்போது ஆகுபெயராகும்?**

ஒரு பெயர்ச்சொல் அதனைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய வேறு ஒன்றிக்கு ஆகி வரும்போது அது ஆகுபெயர் ஆகிறது.

**2.இரட்டைக்கிளவி என்பது யாது? சான்று தருக.**

சொற்கள் இரட்டையாக இணைந்து வரும். பிரித்தால் தனியாக பொருள் தராது. இது இரட்டைக்கிளவி எனப்படும். சான்று : சலசல, தகதக, படபட

**இ) சிறுவினா.**

**1. பொருளாகுபெயர், சினையாகுபெயர் வேறுபடுத்துக.**

| பொருளாகுபெயர் | சினையாகுபெயர் |
|---|---|
| பொருளின் பெயர் அதன் சினையாகிய உறுப்புக்கு ஆகி வரும். எ.கா. மல்லிகை சூடினாள். மல்லிகை என்னும் செடியைக் குறிக்காமல் அதன் சினையாகிய பூவிற்கு ஆகி வருதல். | சினையின் பெயர் முதலாகிய பொருளுக்கு ஆகி வரும் . எ.கா. தலைக்கு ஒரு பழம் கொடு. தலை என்னும் சினை தலையை உடைய மனிதனுக்கு ஆகி வருதல். |

**2. இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் - ஒப்பிடுக.**

| இரட்டைக்கிளவி | அடுக்குத்தொடர் |
|---|---|
| இரண்டு முறை ஒரே சொல் வரும். பிரித்தால் பொருள் தராது. வினைக்கு அடைமொழியாகக் குறிப்புப் பொருளில் வரும். எ.கா. சலசல, தகதக | இரண்டு முதல் நான்கு முறை ஒரே சொல் மீண்டும் மீண்டும் வரும். பிரித்தால் பொருள் தரும். விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் ஆகிய பொருள்கள் காரணமாக வரும். எ.கா. பாம்புபாம்பு, வருகவருக |

### கற்பவை கற்றபின்

1. மாணவர்களின் செயல்பாடு தாங்களாகவே செய்ய வேண்டும்.
2. **அன்றாடப் பேச்சு வழக்கில் இடம் பெறும் அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி ஆகியவற்றைத் தொகுக்க.**

1. ஓட்டப்பந்தயத்தில் <u>ஓடு ஓடு</u> என்று உற்சாகப்படுத்துதல்
2. விழாவிற்கு வருபவரை <u>வருக வருக</u> என வரவேற்றல். 3. பயத்தில் <u>பாம்பு பாம்பு</u> என அலறுதல்.
4. அழகான பேச்சை <u>அருமை அருமை</u> எனப் பாராட்டுதல்.

5. தங்கத்தை <u>தக தக</u> என மின்னுகிறது எனக் கூறுதல்.

6. காற்றில் கதவு <u>சட சட</u> என அடித்தல். 7. ஆற்றில் நீர் <u>சல சல</u> என ஓடுதல் போன்றவை.

## மொழியை ஆள்வோம்

**கடிதம் எழுதுக.**

**உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.**

மதுரை

26.10.2020

அன்புள்ள மாமா அவர்களுக்கு,

வணக்கம். நீங்களும் அத்தையும் நலமுடன் இருக்க இறைவனை வேண்டுகிறேன். இங்கு நாங்கள் அனைவரும் நலம். ஆண்டுதோறும் சித்திரை மாதம் நடைபெறும் திருவிழா உங்கள் அனைவருக்கும் மிகவும் பிடிக்கும் அல்லவா. இந்த வருடம் நடைபெறும் திருவிழாவிற்கு நீங்கள் அனைவரும் வர வேண்டும். இந்த ஆண்டு சிறப்பாக தேர்திருவிழாவில் நாமும் கலந்து கொள்வோம்.

மேலும் திருவிழாவில் நாட்டுப்புறக்கலைநிகழ்ச்சிகள் பல சேர்க்கப்பட்டுள்ளன. அதனால் உங்கள் வருகையை எதிர்பார்த்து நானும் குடும்பமும் காத்திருப்போம்.

இப்படிக்கு,

உங்கள் அன்பு மருமகன்,

அன்பரசன்

உறை மேல் முகவரி

பெறுநர்:

திரு. செல்வம்

84, திருமலைநகர்,

சேலம்.

**கீழ்க்காணும் படங்களைப் பார்த்து இரட்டைக்கிளவி அமையுமாறு தொடர் உருவாக்குக.**

1. மழை <u>சடசடவெனப்</u> பெய்தது.
2. பறவைகள் <u>படபடவெனப்</u> பறந்தது.
3. இரயில் <u>தடதடவென</u> ஓடியது.
4. மரக்கிளை <u>மடமடவென</u> ஒடிந்தது.

**கீழ்க்காணும் அறிவிப்பைப் படித்து, அதன் பின் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்க.**

விடைகள்

1. தீ பாதுகாப்புக்கருவிகள், தீத்தடுப்பு எச்சரிக்கை ஒலிப்பான்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.
2. தீயணைப்பு மீட்புப்பணித்துறைக்குத் தொலைபேசி வழியாகத் தெரிவிக்க வேண்டும். மின் இணைப்பைத் துண்டிக்க வேண்டும்.
3. பொது இடங்களில் தீ விபத்து ஏற்பட்டால் பதற்றமடைந்து ஓடாமல், அவசர கால வழியில் வெளியேற வேண்டும்.
4. தீ விபத்து ஏற்பட்ட கட்டடத்தின் மின்தூக்கியைப் பயன்படுத்தக் கூடாது. தீக்காயம் பட்ட இடத்தில் பேனாமை, எண்ணெய் போன்றவற்றைத் தடவக்கூடாது.
5. தீக்காயம் பட்ட இடத்தை தண்ணீரைக் கொண்டு குளிர வைக்க வேண்டும். ஆடையில் தீப்பிடித்தால் உடனே தரையில் படுத்து உருள வேண்டும்.